
# தென்மொழி

## சீரழிவும் செஞ்சோற்றுக் கடனும் !

சிங்களவக் கொடியர்
  செயுந்தீங்கு போதாவென்(று)
இங்கமைதிப் படையென்றே
  இந்தியப் படைதானும்
சென்று தமிழர்களைச்
  சீரழிப்ப தென்னவோ ?
சென்று தமிழரைச்
  சீரழிப்ப தென்னவென்றால்,
என்றுந் தமிழினத்தை
  ஈடேற வொட்டாமல்
நின்றென்றும் அடிமையராய்
  நிலைப்படுத்தும் நோக்கமன்றோ ?

ஆடவரைக் கொன்றும்
  அரிவையரைக் கற்பழித்தும்
காடையர் சிங்களவர்
  செய்துவந்த கயமையையே
இந்தியப் படைஞரும்
  செய்கின்றார் என்றறிந்தும்
நந்தமிழ ருள், சிலரும்
  நயப்படுத்தல் என்னவோ ?
நந்தமிழ ருள், சிலரும்
  நயப்படுத்தல் தாம்உண்ணும்
செஞ்சோற்றுக் கடனென்று
  செப்பிடவும் வேண்டுதற்கே !


சுவடி : 23
ஓலை : 11

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
உருபா: 1-75

# நமக்கு வந்த மடல்கள்.

○ : *1251* : அண்ணலே, அறிவன் வணக்கம். நான் துருப்பு. எனினும் என்னையும் விரும்பி ஈடுபடுத்தும் தங்களின் அருமை அறிவேன். ஆம். தமிழின முன்னேற்றமே அதற்குக் காரணம் என்ற உண்மை அறிவேன். தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டுக்கான நிலுவைகளை விரைவில் தீர்த்துவைக்க முயல்வேன். முகவை மாவட்டத்தில் அத்தகைய நிலைமை இருப்பதற்கு நாணுகின்றேன். என் பொறுப்புகளையும், கடமைகளையும் உணர்ந்துள்ளேன்; என்றாலும், முப்பதாண்டுக்காலத் தவறுகளைக் களைய நான் படும் பாடு சிறிதன்று. ஆயினும் இயங்குகின்றேன் ! தமிழினவுணர்வே இதற்கும் காரணம் என்பேன் !

அடி ஆழத்தில் செல்லவும், மக்களிடம் போகவும் பல்வேறு தடைகளை உடைத்தெறியும் துணிச்சல் வேண்டும். அதனை, ஈடுபடுதல் மூலம் பெற முனைகிறேன் ! மயிலாடுதுறை, மதுரை நிகழ்ச்சிகள் பற்றி அறிவீர்கள்— மறமிகு. தி. இரா.வும், பொ. மு. செ.வும் எடுக்கும் முயற்சிகளைப் பார்க்கிறேன். அவை ஏன், மக்களை நெருங்கவில்லை ? ‘முழு நேர ஊழியர் வேண்டும்’, என்கின்றனர். ஆனால், தமிழக நிலவியல், வரலாற்றோடு, இன்றைய அரசியல் தெளிவு, திட்டம், மெய்யியல் குறித்த ஆய்வும் அதற்கான செயலூக்கமும் இல்லாமல் முழுநேர ஊழியர் உருவாதல் கடினமே. இருக்கின்ற நேரங்களை அவமே கழிக்கின்ற திட்டமிட்ட வாழ்க்கை முறையற்ற என்போன்றவரே அதிகம். இவர்கள் மீது அக்கறை செலுத்தி விடுதலைக்கான பல்வேறு மக்கள் திரள் அமைப்புகளைக் கூட்டுதல் வேண்டும் ! ஓர் அரசியல் ஆணைமீதே நமது அமைப்புகள் இயங்குதல் வேண்டும். உதிரிகளாக நாமுள்ள வரை உருப்படியாக எதுவும் செய்யமுடியுமெனத் தோன்றவில்லை.

நாம் விடுதலைப் போராளிகளிடமிருந்து கற்போம். முன்னதாகத் தமிழ் நிலத்தில் உள்ள—தமிழகத்தில் உள்ள—மக்களை மேலும் பயின்று முன்னேறுவோம் ! அதற்கான தெளிந்த மெய்யியல் நடைமுறை, திட்டம் அணியப்படுத்துதல் வேண்டும் ! இதனை ஏட்டளவில் இல்லாமல், ஆங்காங்கே கருக்குழுக்களை உருவாக்குதல் வேண்டும் ! செயல்படுதல் வேண்டும் ! நேரில் சந்திப்போம் என்றும்—ஒழுங்கமைத்துக் கொண்டு செயல்படுவோம், எழுதுவோம் என்றும் காலம் கடத்தி விட்டேன். என் எழுத்துகள்—வெளிவருதலும் நிற்றலும் ஏற்றலும், தமிழினநலம் கருதியே ஆகுக ! அன்புடன், —பறம்பை. அறிவன், பறம்புக்குடி.

○ : *1252* : பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அவர்களுக்கு, வெளிமாநிலத்திலிருந்து என் கொள்கைகள் திறமைகள்யாவும் குடத்தினுள் விளக்காக வெதும்பிக்கொண்டிருக்கும், ஓர் ஏழைப் பாவலனின் உரிமைக்குரல் இது. தங்கள் இதழும் தாங்களும் இவ்வேழையின் உரிமைக்குரலை உலகுக்கு எடுத்துரைப்பீர்கள் என்னும் ஆர்வத்தில் தங்களுக்கு அனுப்புகிறேன். தங்கள் கொள்கையில் என்றுமே அழியாத நம்பிக்கையும் பற்றும் கொண்டவன் நான். தாங்கள் ஆதரவு தந்தால் தொடர்ந்து எழுத உள்ளேன்.

—எம். இராமசாமி. வணி.இ, எலமந்து.



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[ திருவணம் தி. பி. 1990 (1959) ]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை-முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்:மா.பூங்குன்றன்:க.மு. (தொலைபேசி : 84782

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசுஆர். பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி த. தானியேல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், தென்மொழி கதிர் மதியன், தென்மொழி இரா. பாலகங்காதரன் பாவலர். சா. சி. சுப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ; பொன். பாலகிருட்டிணன்; பாச்சுடர். புலவர். இரா. வடிவேலனார்: க. மு, கல், இ; மருத்துவர்.சி. இராமச்சந்திரனார், வழக்கறிஞர். பொன்னெழிலன்

சுவடி 23] ௨0௧௮ துலை-நளி (நவ-திச.'87) [ஓலை 11



# இந்தியாவில் எடுத்த எடுப்பில் பொருளியல் புரட்சியை உருவாக்க முடியுமா?-5.

மக்கள் மனமாற்றம் கொள்ள வேண்டும்—அதை அவர்களே செய்து கொள்ள முடியாது. எனவே அவர்களை மனமாற்றம் கொள்ளும் படி செய்ய வேண்டும். மக்கள் மனமாற்

றும் பெருத நிலையில் எந்தப் புரட்சியால் விளைந்த பயனும் நிலை பெருது. எனவே, மக்களுக்குச் சமவுடைமை அல்லது பொது வுடைமைப் பொருளியல் சார்ந்த ஓர் அரசை நாம் உருவாக்கித் தர விரும்பினுல், அப்படிப்பட்ட ஓர் அரசின் தனிச்சிறப்புத் தன் மையை நாம் அவர்களுக்கு உணர்த்திட வேண்டுமன்றே ? அவ் வாறு உணர்த்தாத வரையில், அவர்கள் வெறும் பழைமை விரும் பிகளாக்வேதாம் இருக்க முடியும். அவர்களின் தாழ்வு நிலைக்கு அவர்களேதாம், அல்லது அவர்கள் பிறவிதான் காரணம் என்று அவர்கள் நம்பிக்கிடக்கும் போக்கு, அவர்களுக்கு மாறவே மாருது.

முதலாளியக் கோட்பாட்டுக்கு மதம் மிக மிக அடிப்படையா னது. அதுதான் அவர்களின் பொருள் பறிப்பு முயற்சிக்கு ஓர் இரும்புத்திரை ! அவர்களைப் பற்றிக் கண்டு கொள்ளாமல் இருக்க, மக்களுக்குக் கொடுக்கும் மயக்க மருந்து ! இந்த மதத்தின் ஆட்சியை ஒடுக்கா விடில், அடித்துச் சாய்க்காவிடில், ஏழையர் தம்மைத் தாமே ஒடுக்கிக் கொள்வர் ; தம்மைத்தாமே அடக்கிக் கொள்வர். ஏழைகளை உண்மை உணரும்படி செய்ய வேண்டுமா ஞல் முதலாளிகளின் கைகளில் உள்ள இந்த மதம் என்னும் மந் திரக் கோலைத்தட்டிப் பறித்தாக வேண்டும் ; முதலாளியத்தின் அகண்ட வாயிலிருந்து மதம் என்னும் நச்சுப் பல்லைப் பிடுங்கியாக வேண்டும்.

இந்த மதம் இந்துமதமாக இங்கே வடிவம் பெற்றுள்ளது. எனவே, இந்து மதச் சாக்காட்டைத் தூர்க்காமல் இந்தியாவில் பொதுவுடைமை என்னும் மரத்தை நட்டு வளரச் செய்ய முடி யாது. இந்து மதத்தை வேரறுப்பதற்குச் சாதியை முதலில் தீக் கொளுவச் செய்தாக வேண்டும். மதத்தையும் சாதியையும் ஒழிப் பது அத்துணை எளிய செயலன்று. ஆனுல் இதைப்பொதுவுடைமை உணர்வுள்ள இளைஞர்கள்தாம் செய்தாக வேண்டும். இந்த நாட் டுப் பொதுவுடைமை உணர்வுள்ள இளைஞர்களுக்கு அத்துணைத் துணிவுள்ளதா ? திறனுள்ளதா ? அதற்கு முன் அவர்கள் இன் ஞெரு தெளிவைப் பெற்ருக வேண்டும். அஃது, இறைமை வேறு; மதம் வேறு என்று உணர்வது.

முதல் (Capital) எப்படி முதலாளியமாக (Capitalism) வடிவம் எய்தியதோ, அப்படித்தான் இறைமை மத வடிவமாக ஆகியுள்ளது. முதல் தேவை; ஆனுல் முதலாளியம் தேவையில்லை. அதுபோலவே இறைமை உணர்வு தேவை ; மதவுணர்வு தேவை யில்லை. இறைமை ஒருவனைத் தெளிவிப்பது; மதம் ஒருவனை மயக குவது ; இறைமை ஒருவனை உரிமைக்குத் தூண்டுவது ; மதம் ஒரு வனை அடிமைத்தனத்தில் மூழ்குவிப்பது. நுட்பமான இந்த வேறு பாடுகளைத்தெளிவாக உணர்ந்து கொள்ளாமல், மதத்தையும் முத லாளியத்தையும் ஒழிக்க முடியாது.

நம்மில் சிலர் இறைமையே மதத்திற்கு அடிப்படை என்று எண்ணிக் கொண்டு இருக்கிருர்கள். 'விதையிருந்தால் அந்த

விதைக்குத் தக்க மரம் இருக்கத்தானே செய்யும். நச்சு மரம் ஒன்றின் விதையும் நச்சாகத்தானே இருக்க முடியும். எனவே, நச்சு மரத்தை ஒழிக்க வேண்டுமானால், அதன் நச்சு விதையையும் ஒழித்தன்றே ஆக வேண்டும் ; அதுபோல் மதம் என்னும் நச்சு மரத்தின் விதையாகிய இறைமையும் நச்சாகவே இருக்க வேண்டும். எனவே அதையும் ஒழித்தாக வேண்டும்' என்பது அவர்கள் தருக்கம்.

விதை நச்சானது இல்லை. அஃது ஊன்றிய இடந்தான் அந்த விதையினின்று கிளைத்த மரத்தை நச்சாக்கி இருக்கிறது. மாந்தனுக்குள்ள மனம் போன்றது இறைமை. ஆனால் நல்ல சூழல் இல்லையானால் அந்த மனம் தீய மனமாக வளர்வது போல், மாந்தனுக்குத் வேவையான இறைமை, நல்ல சூழலில் வளராமல் மதம் என்னும் நச்சு மரமாக வளர்ந்து விட்டிருக்கிறது. அந்த மரத்தை வெட்டி வீழ்த்திவிட்டு, அதன் விதையை நல்ல நிலத்தில் ஊன்றி, நறு நீர் பாய்ச்சி வளர்க்க வேண்டும். அப்பொழுது அதனால் கிடைக்கும் பயனும் நல்லதாகவே இருக்கும்.

இறைமை என்பது ஓர் இயற்கை உணர்வு. அது வேறுபாடற்றது ; உரிமையைத் தூண்டுவது ; விடுதலைக்கு வேரானது ; சமநிலை உடையது ; சமத்துவம் கற்பிப்பது ; இன்பம் நல்குவது ; பகைமையைத் தவிர்ப்பது ; மாந்தனின் அகங்காரத்தை அகற்றுவது ; அறிவை உணர்த்துவது ; அன்பை வளர்ப்பது ; அறியாமையைத் தூர்ப்பது ; தந்நலத்தை மறுப்பது ; பொது நலத்தைத் தூண்டுவது ; மக்களை ஒன்று படுத்துவது ; பாகுபாட்டை அவிப்பது ; இறைமைக்குச் சாதியில்லை ; ஏழ்மையில்லை. இதற்கு நேர் எதிரான மெய்ம்மங்களைக் கொண்டதே மதம் !

இதே போல்தான் முதல் (பொருள்—Captial) என்பது இவ்வுலக வாழ்க்கைக்கு மூலமானது; முதலானது; உரிமையைத் தூண்டுவது ; உழைப்பை உணர்த்துவது ! மக்கள் சமத்துவத்திற்கு அடிப்படையானது ; வேறுபாட்டை அகற்றுவது ; இன்பம் நல்குவது ; பகையைத் தவிர்ப்பது ; மாந்தனிடம் ஆக்க உணர்வுகளான அறிவு, அன்பு, இவற்றை வளர்த்தெடுப்பது ; சாதியைத் தொலைப்பது ; மக்களை ஒன்று படுத்துவது !

ஆனால், இறைமை மதமாக வளர்ந்து தீமைதருவது போல், முதல் முதலாளியமாக வளர்ந்து தீமை தருகிறது. எனவேதான் முதல் தேவை ; முதலாளியம் தேவையில்லை—இதே போல் இறைமை தேவை ; மதம் தேவையில்லை—என்கிறோம்.

இனி, பொதுவுடைமையை வளர்க்கப் புறப்பட்ட நம் இளைஞர்கள், இவ்வேறுபாடுகளை நுணுகி ஆய்ந்து உணராமல், மதத்தை ஒழிக்கின்ற நோக்கத்தோடு, சாதியை ஒழிக்கின்ற நோக்கத்தோடு, அவற்றுக்கு அடிவேராக—வித்தாக—இறைமை இருப்பதாகக் கருதிக்கொண்டு, அதையும் ஒழிக்க எண்ணங்கொண்டிருக்கிறார்கள்.

இறைமை இயற்கையான ஓர் உணர்வாதலின், அதை ஒழிக்க இயலாமல் அல்லற் படுகின்றனர். மதம் இறைமையின் மேல் கட்டப் பெற்ற ஒரு செயற்கை உணர்வு. அதில் மக்களினத்துக்குத் தேவையல்லாத—தீங்கான பல கூறுகள் இருப்பதால், அதை ஒழித்தே ஆக வேண்டும் என்று நினைப்பது சரி. ஆனால் அதற்காக இயற்கை உணர்வான இறைமையையே ஒழிக்க முயல்வதால்-தான் இத்தனை இடர்ப்பாடுகள் படவேண்டியுள்ளன.

அதேபோல், முதல், இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு மூலக் கருவி. அக்கருவி தந்நலக் காரர்களால் தவறாகக் கையாளப் பெற்றுப் பலர்க்குத் தீங்கான விளைவுகளைத் தந்து கொண்டுள்ளது. எனவே முதலை அடக்கி ஒடுக்கித் தன்வயப்படுத்தியுள்ள முதலாளியத்தை ஒழித்துக்கட்ட நாம் முயல்கிறோம்—முயல வேண்டி உள்ளது. இனி, முதலாளியம் தீங்கான விளைவுகளைத் தருகிறது என்பதற்காக, அதற்கு மூலமாகவுள்ள முதலையே நாம் ஒழித்துக்கட்ட முயலலாமா? முதல் இல்லாமல் முதலாளியம் எங்கு வந்தது என்னும் வினவை எழுப்பிக் கொண்டு, முதலையே தீர்த்துக்கட்ட முயன்றால் விளைவு என்னவாகும்?

'உலக முதல் அனைவர் கைக்கும் போய்ச்சேர வேண்டும் என்பதுதான் நம் கொள்கை. அ'து அனைவர்க்கும் பயன்பட வேண்டும் எனபதுதான் நம் முயற்சி. அதை விட்டுவிட்டு, எய்தவன் இருக்க அம்பை நொந்து கொள்வதுபோல், முதலாளியம் இருக்க முதலை நோவது பிழையன்றோ? இதில் ஒரு தெளிவை நாம் பெற்றுக் கொண்டால்தான், ஒழிக்க வேண்டுவது எது, வளர்க்க வேண்டுவது எது, என்பவை நமக்குக் கண்ணுக்குக் காட்சியாக விளங்கும்.

எனவே, இளைஞர்களின் நோக்கு, மதத்தை ஒழிப்பதிலும் அதற்குத் துணையாக உள்ள சாதியைத் தகர்ப்பதிலும், இருக்க வேண்டுமே தவிர, இறைமையை ஒழிப்பதில் இருக்க வேண்டாம் என்பதும், முதலாளியத்தை ஒழிக்க வேண்டும், முதலை ஒழிக்க வேண்டாம் என்பதுமாகவே இருக்க வேண்டும். அத்துடன் இவற்றுக்கு மறுதலையாக, இறைமையை வளர்க்க வேண்டும். அது போல் முதலையும் வளர்க்க வேண்டும் என்பனவும் நம் கொள்கை என்று கொள்ள வேண்டும். அதோடு, உண்மையான இறைமை வளர்ச்சி மதத்தையும் சாதியையும் ஒழிக்க உதவும் என்பதையும், உண்மையான முதல் வளர்ச்சி முதலாளியத்தையும் ஒழிக்க உதவும் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

மேலே கூறப்பெற்ற இவ்வுண்மைகளை நாம் தெளிவாக உணர்ந்து கொண்டால் ஒழிய, நம் சாதி மத ஒழிப்பும், முதலாளிய ஒழிப்பும் வெட்ட வெட்டத் துளிர்க்கும் முள் மரங்கள் போலவே வளர்ந்து கொண்டுதாம் இருக்கும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வுண்மைகளை இன்னொரு கோணத்தில் நின்றும் நாம் பார்த்தல் மிக இன்றியமையாததாகும். அது, நம் இளைஞர்க

ளுக்குச் சாதிவெறி இல்லை ; ஆனால் சாதிப்பற்று இருக்கிறது ; மத வெறி இல்லை ; ஆனால் மதப்பற்று இருக்கிறது. அதே போல் முதல் வெறியில்லை ; ஆனால் முதலாளியப் பற்று இருக்கிறது—என்பது தான்.

சாதி வெறிக்கும் சாதிப்பற்றுக்கும் என்ன வேறுபாடு ? அதே போல் மதவெறிக்கும் மதப்பற்றுக்கும், முதல் வெறிக்கும் முதலாளியப் பற்றுக்கும் என்ன வேறுபாடு ? —இவற்றையும் நாம் தெளிவாக, வேறு பிரித்து உணர்தல் வேண்டும்.

இக்காலத்துப் படித்த இளைஞர்கள், வெளியுலகில் பழகும் சூழல் வளர்ச்சியடைந்த நிலையில் இருப்பதால், அவர்களிடம் சாதிவெறி மண்டியிருப்பதில்லை. ஆனால் அவர்கள் திருமணத் தொடர்பு முதலியவற்றை மேற்கொள்ளும் பொழுது, அவர்களின் சாதி வளையத்தை விட்டு வெளியே வர விரும்புவதில்லை. மேலும் தாங்கள் இன்ன சாதி என்கின்ற உணர்வு எப்பொழுதும் அவர்கள் உள்ளத்தில் விடிவிளக்காக எரிந்து கொண்டே உள்ளதை, மற்ற புறவுணர்வு விளக்குகளின் ஒளி இல்லாத நேரத்தில் நன்கு அறிந்து கொள்ளலாம். இங்குப் புறவிளக்குகளின் ஒளி என்பது கலையுணர்வு, அறிவுணர்வு, பொது ஈடுபாடு, விளையாட்டுணர்வு பிற பொழுது போக்குணர்வு—ஆகியவற்றின் சூழ்நிலைகள் எனப்பொருள் கொள்க. அவை எவற்றிலும் ஈடுபடாமல் தாமும் தம் குடும்பமுமாகவோ, தம் உறவுமாகவோ—இருக்கும் பொழுது, தம் சாதியுணர்வு தலையெடுத்திருப்பதை ஆய்வினில் பார்க்கலாம். இதுதான் சாதிப்பற்று. அஃதாவது வெளிப்படையாக இருப்பது சாதி வெறி. உள்முகமாக இருப்பது சாதிப்பற்று. இது சாம்பல் நெருப்புப் போல் உள்ளேயே கனன்று கொண்டிருக்கிறது. ஆனால் புறத்தே இவர்கள் சாதியொழிப்பைப் பற்றியும், கலப்பு மணத்தைப் பற்றியும், பெண்கள் விடுதலையைப் பற்றியும் வீரதீரமாக மேடைகளில் பேசுவதைப் பார்க்கலாம்.

இனி, பொதுவுடைமையுணர்வும், பகுத்தறிவுணர்வும் உள்ள நம் இளைஞர்களும் இப்படித்தான். அவர்கள் பொதுவுடைமைக் கொள்கையைப் பேசிக்கொண்டே, முதல் உணர்வுக்கும் ஆட்பட்டிருக்கும் தன்மையை ஆய்ந்து பார்த்து உணரலாம். பொதுவுடைமைக் கொள்கை பேசுகின்ற ஒருவருக்கு ஏதோ ஒருவகையில்—பழைய மூதாதையர் வழியிலோ, அல்லது புதிய திருமண உறவு போன்ற வழியிலோ, அல்லது புதிய தொழில் முயற்சிகளிலோ முதல்(பொருள்)வந்து சேர்ந்தால், முன்பிருந்த பொதுவுடைமைக் கொள்கை உணர்வில் படிப்படியாகப் பிடிப்புத்தளர்வதையும், முதலாளிய நாட்டம் தோன்றுவதையும் ஆய்ந்துகாணலாம். இதை எழுதுகிறவர் எளிதாக இக் குற்றச்சாட்டை அவர்கள் மேல் சுமத்தவில்லை. கடந்த நாற்பதாண்டுகளின் தொடர்ந்த பொதுநல ஈடுபாட்டில் கண்ட உண்மைகளின் வெளிப்பாடே இதுவாகும். முதல் வைத்திருப்பவனெல்லாம் முதலாளியில்லை. முதலாளியக் கோட்பாடு உடையவனே முதலாளி. அவன் உணர்வே முதலாளிய

உணர்வாகும். அவன் அறிவு, அன்பு, செயல் முதலிய அனைத்தும் முதலாளிய உணர்வு கொண்டவை. முதலாளிய உணர்வின் உள் நோக்கம் சுரண்டல். எனவே, பிறரைச் சுரண்டித் தன் முதலைப் பெருக்க வேண்டும் என்னும் மனப்பான்மையே முதலாளிய மனப் பான்மையுடையதுதான். இந்நிலையில் பொதுவுடைமை உணர்வுள் ளவன், முதலாளியாக மாறுவானுனல், முதலாளியத்தை இன் னும் திறமையாக, வெளிக்குத் தெரியாதவாறு கரவாகக் கடைப் பிடிக்கிருன்.

இந்நிலை இந்தியாவில் எண்பது விழுக்காடு இருந்தால் வெளி நாடுகளில் அறுபது அல்லது ஐம்பது அளவில் இருக்கும். எனவே, இங்குத் தூய்மையான பொதுவுடைமை உணர்வு கால் கொள்ளு வது அரிதினும் அரிதாக இருக்கிறது.

இனி, இதே வகையில்தான் மவவுணர்வும். சாதிவுணர்வு அறவே ஒழியாதவிடத்துக் கொண்டிருப்பது மதவெறி. சாதி வெறி மதவெறி—இரண்டும் வெளியில் தெரியாமல் சாதிவுணர் வாகவும் மதவுணர்வாகவும் அமுங்கி யிருக்கையில், இறையுணர் வும் சிறு விடிவிளக்குப்போல் எரிந்து கொண்டு இருக்கும் என்பது காலம் இடம் வரும் பொழுது தெரிந்து கொள்ள வேண்டிய ஒன் ருகும். இவற்றை அவரவர் பட்டறிவால் உணர்ந்தால்தான் உண்டு. மற்றபடி யாராலும் உணர்த்தவும் இயலாது ; யாரும் அவ்வாறு உணர்த்தி விடுவதும் இல்லை.

இவ்வாறு பொருள் நசையும், சாதி நசையும், மத நசையும்— இந்தியாவில் உள்ள மக்களில் ஏறத்தாழ தொண்ணூற்றைந்து விழுக்காட்டு மக்களிடம் இருப்பதை எவரும் எங்கும் எந்நிலையி லும் ஆய்ந்து அறிந்து கொள்ளலாம். இதைப் பொய்யென்று எவ ராகிலும் மெய்ப்பிக்க முற்படுவாராளுல், ஒன்ருல் அவர் இந்திய மக்களியல் உணராதவராகவோ, உண்மையறிவு வாயாதவரா கவோதாம் இருத்தல் வேண்டும். ஆனுல் அவரும் உண்மையை உணர்ந்து கொள்ள நெடுங்காலம் ஆகாது. (தொடரும்)

## ஆங்கில மையல் !

ஆங்கில மையலால் (மோகத்தால்) வெளிநாட்டாசையால், இளங் குழந்தைகளை வளர்க்காதீர்கள். பெரிதாக எதிர்பார்த்துப் பிற்காலத்தில் ஏமாற்றம் அடைந்து மனங்குலைவார்கள். நாட்டுப் பற்றின்றிப் பண்பாட்டு வேரின்றி நாடோடியாகி விடுவார்கள். இவ்வளவு ஆங்கிலக் காதல் நம் குழந்தைகட்கு எதிர்காலத்தில் பல கெடுதல்களைத் தரும் என்ற எச்சரிக்கையைப் பெற்ருேர்கள் குறிப்பாகப் பணக்காரர்கள் உணர்வது நல்லது. வீட்டிலும் நாட் டிலும் பேசப்படாத ஒரு மொழியைப் பள்ளி மொழியாக இன் னும் வைத்துக் கொண்டிருப்பது பகுத்தறிவன்று. அடிமையின் தொடர்ச்சியாகும். ○

—பா. வ. சுப. மாணிக்கனுர்

ஒரு முறையீட்டு மடல்!

# இலக்கியத் திருட்டு!

ஐயா, வணக்கம். ''இவர்தாம் பெருஞ்சித்திரனர்'' என்ற தலைப்பில் என்னுல் பாடப்பெற்ற பாடல்களில் ஒன்று மட்டும், 'தனித்தமிழோடு உயர்வோம்' என்ற தலைப்பில் தென்மொழி சுவடி 23 ஓலை10.இதழில் வெளியிடப்பெற்று அடியில் 'செ.மீ.இர. தமிழன்பனுர், பெராக், மலேசியா' என்று தவருகக் குறிக்கப் பெற்றுள்ளது என்பதையும், இப்பாடலும் இது சேர்ந்த பாடல்களும் முன்பே தென்மொழி சுவடி 22 ஓலை 3. ஆம் இதழில், புலவர் திருக்குறள் நாவை. சிவம் க.மு. என்ற என் பெயரிலேயே வெளி வந்துள்ளன என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இதனை இங்கு சுட்டிக்காட்டுவது எதற்கெனில், பெரம்பலூர்-பாவேந்தர் இலக்கிய மன்ற விழாவில் 27.4.75 இல் பாவேந்தர் பற்றி என்னுல் பாடப்பெற்ற பாடல்களில், 'பாட்டுப் பாட்டன்' என்ற தலைப்பில் 48 வரிகளை மட்டும், திண்டிவனத்திலிருந்து திரு. வகாப் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்த 'குயில்'—இதழின் 'பாவேந்தர் பிறந்தநாள் மலருக்கு' விடுத்து வைத்தேன். அவர் அப்பாடலை வெளியிடாமல் 'தமிழரசு'—எனும் அரசு இதழுக்கு அனுப்பி விட்டார். 16.4.81. தமிழரசு இதழில் 'பாட்டுப்-பாட்டன்'—என்ற என் பாடல், திரு. வகாப் அவர்கள் பெயரில் வெளியானது. இதனை அறிந்த யான், தமிழரசு ஏட்டிற்குத் தொடர்பு கொள்ள, தமிழரசு ஏடு, திரு. வகாப் அவர்களுடன் தொடர்பு கொள்ள, உடனே திரு வகாப் எனக்கு எழுதி, 'நீங்கள் நினைத்தால் பெரிய பாடலும், நல்ல பாடலும் பாவேந்தர் பற்றி எழுதிவிடலாம்.. தங்கள் மேல் கொண்ட நட்புரிமையால் இச் செயல் நடந்து விட்டது. தாங்கள் பெருந்தன்மையோடு இதனைப் பெரிது படுத்த வேண்டா'வென்று—கெஞ்சி ஒரு மடல் எழுதினர். என் ஏழைமையில் வழக்குத்தொடர இயலாமலும், பெருந்தன்மையுடனும் விட்டு விட்டேன். இச் செய்தியைச் சில ஏடுகட்கு எழுதியும், அதனை எந்த இதழும் வெளியிடவில்லை. தென்மொழியேனும் இச்செய்தியை வெளியிட வேண்டும் என்பதற்காகவே தான் ஈண்டுத் தென்மொழிப் பார்வைக்குத் தெரிவிக்கின்றேன். திரு. வகாப் இப்போது காலமாகி விட்டார். அவர் காலமான பின் தமிழக அரசு அவரதுபணி—பாடல்களைப் பாராட்டிப் பாவேந்தர் விருதும், பணமுடிப்பும் வழங்கியுள்ளதாக அறிகிறேன். இலக்கியத் திருட்டு நடத்திடும் திருவாளர் கைத்தாளங்கட்குப் பாராட்டு—பதவி—பண உதவி தரும் இன்றைய தமிழக அரசு, பாவலரேறு போன்ற பைந்தமிழியற்கைப் பாவலரை ஏறெடுத்துப் பார்க்குமா ? ஏற்ற இனிய துணைதான் செய்யுமா? உலகத் தமிழ் மாநாட்டிற்குத்தான் அனுப்பி வைக்குமா ? உண்மைத் தமிழன்பர்கள் உணர்வார்களாக. அன்பின்,

— திருக்குறள் நாவை. சிவம்,மணப்பாறை.

## என். மலர்விழி-இல. அருட்செல்வன் வாழ்க.

கடந்த துலைத்திங்கள் 23 (9.11.87)ஆம் பக்கல், திங்கட் கிழமை காலை. 9.00 மணியளவில் டி. நித்தியானந்தன்—என். கத்தூரி இணையரின் அன்பு மகள் செல்வி. என். மலர்விழிக்கும் நெடுநாளைய தென்மொழி அன்பர் இல. அருட்செல்வனுக்கும் விருகம்பாக்கம், சிறி பத்மாவதி கல்யாண மண்டபத்தில், உ.த. மு.க முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் சீரிய தலைமையில் திருமணம் நடைபெற்றது. தொடக்கத்தில் உதவிக் கணக்கு அலுவலர் திரு. தி.வா. அண்ணாமலை அவர்கள் வரவேற்புரையாற்றினார். அவரைத் தொடர்ந்து திருமண நிகழ்ச்சிகள் இனிதாக நடைபெற்றன. பின்னர் மணமக்களை வாழ்த்தி துரை. இராமநாதன் (ஓய்வு பெற்ற துணைப்பொருள் தரக்கட்டுப்பாட்டு அலுவலர்) அவர்கள் நல்லுரை வழங்கினார். இறுதியாக மணமகன் இல. அருட்செல்வன் நன்றியுரையாற்றினார். ○

---

(பின் பக்க அட்டைத் தொடர்ச்சி)

என்னுடைய உள்ளத் துயரத்தைப், பிற தமிழ் உள்ளங்களோடு பகிர்ந்து கொண்டு, இனியும், காலம் தாழ்த்தினால், உலக அரங்கில் தமிழன் என்று ஒரு தன்மான இனம் இருந்தது என்ற விண்மையே மறைக்கப்பட்டு விடும் என்பதான ஏத(அபாய) அறிஉப்பைத் தமிழர்களுக்கு எடுத்துச் சொல்லி அனைத்துத் தமிழர்களின் ஒட்டு மொத்தமான ஒற்றுமையை உருவகம் செய்ய இச்சிறியன், தன்னாலானதைச் செய்ய எனக்கு அய்யா அவர்கள் உதவ வேண்டும்.

அனைத்து நாடுகளின் தமிழர்களுக்கான அமைப்புகளின் முகவரி மற்றும் தமிழர்கள் தங்களுக்காக,நடத்தும் செய்தித்தாள்கள் இவற்றின் முகவரிகள் தொடர்புக்கு அருள் கூர்ந்து எனக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். பல்வேறு, பணிகளுக்கிடையில் தங்களுக்கு, இஃது ஓர் அன்புத்தொல்லை ? மன்னிக்கவும். வேறு யாரும் எனக்குச் சரியாகப்படவில்லை. இப்பணிக்கு, பரபரப்பான இற்றை நாளில், தன்னலனுக்குப் பொய் புனைவாளர்கள் நடுவில் தமிழர் நலனுக்குத் தம்மையே ஈடுபடுத்திக் கொண்டுள்ள தங்களால் தாம் இது முடியும் என எண்ணி, நம்பிக்கையின் வெளிப்பாடே இந்த அன்புத் தொல்லை.

உலகத் தமிழர்களில், கடிதத் தொடர்பு, பல்வேறு வகையில் பாசத்தையும், இன வொற்றுமையையும், மொழி உணர்வினையும் வளர்க்கும் என்பதால் அருள் கூர்ந்து உதவும் படி வேண்டுகிறேன்.

—க. இராமன், சென்னை. 93.

(ஆசிரியர் குறிப்பு : ஓர் இதழ் வெளியீட்டு அலுவலகத்தில் உள்ள முகவரிகளைத் தம் ஒருவர் தொடர்புக்காக மட்டும் தேவை என்று கேட்பது சரியில்லை. உலகத் தமிழர் நிறுவனங்கள், பொது நல அமைப்புகள் ஆகியவற்றைப் பற்றிய விளக்கங்களைக் கொண்ட நூல் ஒன்றைச் சென்னையில், அரசுச் சார்பில் இயங்கும் 'உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன''த்தில் கேட்டுப் பெறலாம் அதன் வழி தங்கள் கோரிக்கை ஒருவாறு நிறைவேறும். —(ஆ-ர்.

# இன்றுள்ள தமிழர்கள்!

நூல்: தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்.
ஆசிரியர் : பர்.க. ப. அறவாணன்.
விலை : 304 பக்கம். உரு 25/-
கிடைக்குமிடம் : ஐந்திணைப் பதிப்பகம்,
282, டைபகிராப்ட்சு சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-5.

பண்பாடு :

பண்பாடு மாந்தக் குமுகாயத்தின் வளர்ந்த நிலையைக் காட்டுவதாகும். அவர்தம் மனச்செம்மைப் பாட்டை விளக்குவதாகும். எனவே செம்மைப்படுதல், சீர்திருத்துதல் என்னும் பொருள்களை உடைய பண்படு என்னும் சொல்லடியாகப் பண்பாடு என்னும் சொல் வந்தது என்பது பொருத்தமாகும்

உடன்படு—உடன்பாடு; செயல்படு—செயல்பாடு ; வழிபடு—வழிபாடு ; முரண்படு—முரண்பாடு — என்பன போல் பண்படு—பண்பாடு என்று ஆகி இருக்கலாம்... என்ன வைத்திருக்கிறோமோ அது நாகரிகம். என்னவாக இருக்கிறோமோ அது பண்பாடு... பண்பாடு என்னும் சொல்வழக்குப் பண்டைத் தமிழில் இல்லை என்றாலும், பண்பாடு என்பது பண்பு எனவும் நாகரிகம் எனவும் சுட்டப்பெற்றுப் போற்றப்பெற்று வந்தது என்பது தெளிவாகும்.

ஆங்கிலத்தில் இதனைக் 'கல்சர்' (Culture) என்கின்றனர்... 1870-ஆம் ஆண்டை அடுத்துக் 'கல்சர்' என்ற சொல் பற்றி ஐரோப்பிய உலகில் பெரும் சொற்போர்கள் நிகழ்ந்தன. Culture and Anarchy என்னும் தலைப்பில் மேத்யூ அர்னால்டு விரிவான விளக்கம் தந்தார். அவர் கல்சர் என்னும் சொல்லை விளக்கும் போது,

'ஒருவன் தன் குண நலன்களை நிரப்புவதிலும், தன்னைச் சூழ்ந்து நிற்கும் குமுகாயத்தின் நலன்களைப் பேணுவதிலும் பேரவாக் கொண்டிருக்கும் பக்குவநிலை (Prefection) என்றார்.

அர்னால்டு குறிப்பிடும் இம் மனப்பண்பு மேலும் மேலும் வளர்வது, திருந்துவது, செம்மைப்படுவதாகும். அறிவு, குணம் முதலியவற்றைத் தொடர்ந்து பேணும் மனநிலை. இது பக்குவமாகி முதிர்ந்து கொண்டே செல்லுகின்ற மனநிலை. இம்மனநிலையைப் படிப்படியாகத்தான் ஒருவர் அடைய முடியும். இனிமேல் அடைய வேண்டிய உச்சநிலை இல்லை என்ற முடிவு இதற்குக் கிடையாது.

மாத்யூஅர்னால்டு அவர்களின் கருத்து, தனிமாந்தனையே பெரிதும் சார்ந்திருக்கிறது. ஆனால் பண்பாடு என்பது தனி மாந்தனை மட்டும் சார்ந்திருக்கவில்லை. தனிமாந்தன், இனம், குமுகாயம் என்னும் மூன்றையும் சார்ந்து உருவாகிறது. பண்பாடு தனிமாந்தனோடு ஒடுங்கிக் கொண்டிருக்கவில்லை. அது தனி மாந்தனோடு, குமுகாயத்தோடு சார்ந்திருக்கின்றது. இனமும், குமுகாயமும் கூட பண்பாட்டை வளர்க்கின்றன ; வாழ்விக்கின்றன.

பாடப்படும் பாட்டிலும், வரையப்படும் ஓவியத்திலும் அவற்றை நுகரும் ஓவியத்திலும் பயன்பாட்டுக் கூறுகள் அடங்கிக் கிடக்கின்றன. இசைப் பட்டறிவுகளும் ஓவியக்கலைப் பட்டறிவு களும் ஒரு குமுகாயத்தின் பண்பாட்டுக் களங்களாக விளங்க முடியும். எகுபதிய நாட்டில் இருக்கின்ற இசுபிங்சு உருவங்களும், பிரமிடு உருவங்களும் சிந்துவெளிச் சிற்பங்களும் படிமங்களும் அன்றைய மக்களின் பண்பாட்டுச் சான்றுகள் என்பதில் ஐயமில்லை.

தனிமாந்த மனப்பண்பை, வற்புறுத்துவதிலேயே அர்னல்டு அதிகக் கவனம் செலுத்தியதால் குமுகாயம் பற்றி விரிவாகப் பேச வில்லை. ஆனால் அரசியல் அமைப்பு, அமைப்பில் ஏற்படும் திருப் பங்கள், கல்வி விரிவுக்கான வாய்ப்புகள் ஆகியன ஒரு குமுகத்தில் பெருகுவதற்குத் தகுந்தவாறு குமுகாயத்தின் பண்பாடுகளும் மாறுதல் எய்துகின்றன.

பெண்டிர் பலரை மணக்கலாம் என்ற வாய்ப்பு இருந்த போது, அவ்வாறு நடந்து கொள்வது பண்பாட்டுக் குறை வாகக் கருதப்படவில்லை. பெண்டிர் பலரை மணப்பது சட்டப்படி குற்றம் என்று ஆகிய பின்பு, பழைய பண்பாடு மாற்றம் பெற்றுப் புது வடிவம் எய்துகிறது. கள் குடித்தல் உணவில் ஒரு கூறாகக் கழகக்காலத்தில் கருதப்பட்டது. சமண, பௌத்த மதங் களின் வரவிற்கும், உறவிற்கும் பிறகு கள் அருந்துதல் பெருங்குற்றமாகக் கருதப்பட்டது.

இந்தியா முழுவதும் கறுப்பு நிற மக்களான திராவிடர் கி.மு. 1500க்கு முன்பு நிரம்பி இருந்தனர். வடமேற்கு இந்தியப் பகுதி யான சிந்துவெளியில் திராவிடர் அமைத்திருந்த நகர நாகரிகத் தைக் கி.மு. 1500-இல் காக்கேசிய இனத்தவரான ஆரியர் ஈரான் வழியாக உள் நுழைந்து சீரழித்தனர். திராவிட மக்களை வெற்றி கொண்டனர். பழம் திராவிடருள் பெரும்பாலோர் தென்னிந்தி யாவை நோக்கிச் சிதறினர். சிறுபான்மையோர் வட இந்தியக் காட்டுப்பகுதியில் பழங்குடிகளாக ஒதுங்கினர். வட இந்தியா முழுவதும் பரவிய ஆரியர் அங்குள்ள மக்களோடு கலந்தனர். கலப்பு இனங்களை உண்டாக்கினர். ஏறத்தாழ வடஇந்தியா முழு வதும் ஆரியத்தாலும் ஆரியக் கலப்பினத்தாலும் நிரம்பியது. காலப்போக்கில் அந்தக் கலப்பினம் தென்னிந்தியா நோக்கியும் அடியெடுத்து வைத்தது. அன்று தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்கரை மக்கள் இடப்பெயர்ச்சிக்குப் பெருவழியாக இருந்த தில்லை. மேற்குக் கடற்கரையே வட இந்தியாவிலிருந்து தென் இந்தியா நோக்கி வரும் ஆரியக் கலப்பினங்களுக்கு அரும் சாலை யாக அமைந்திருந்தது. இன்றைய கேரளமும் அன்றைய சேர நாடும் ஆகிய மலையாள நாடு வட இந்திய ஆரிய வரவுக்கு முதல் பாய் விரித்தது. பிற்காலத்தில் 1498-இல் வாசுகோடகாமாவுக் கும் பாய் விரித்தது,

சேரநாடு நம்பூதிரி வயமாயிற்று. நம்பூதிரி வயம் ஆனதால் தான், அது காலப்போக்கில் தமிழகத்தில் இருந்து பிரிந்து கேர

ளம் ஆயிற்று. கேரளத்தைத் தோற்றுவித்தவர் பரசுராமன் என்ற வழக்கும், அப்பரசுராமன் ஆரிய வருணத்தவன் என்பதும் இதனை உறுதி செய்கின்றன. கேரளாவில் உள்ளூர் நாயரும் ஊருக்கு வந்த நம்பூதிரியும் கலந்து வாழ்ந்தமையால் கலப்பினமே உருவாயிற்று. இதனை மாந்தவியல் செய்திகளும் உறுதிப்படுத்தும்.

1. சான்றாக, நம்பூதிரிப் பிராமணக் குடும்பங்களுள் மூத்த ஆண்பிள்ளை மட்டுமே நம்பூதிரிப் பிராமணப்பெண்களைத் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். இளைய ஆண் மக்கள் உள்ளூர் நாயர் குடும்பத்திலேயே பெண் எடுக்க வற்புறுத்தப்பட்டு அது வழக்கமாகவும் பின்பற்றப்பட்டது.

2. நம்பூதிரிப் பிராமணரை மணம் முடிக்காமல், வேறு நாயர் ஆண்களை மணம் முடித்த நாயர் குலப்பெண் முதல் மூன்று நாள் தன் மாப்பிள்ளையுடன் உடல்உறவு கொள்ளாமல் தடுக்கப்பட்டதுடன், நம்பூதிரியோடு மூன்று நாள் உடல்உறவு கொள்ளுவது வழக்கமாக ஆக்கப்பட்டது. இவ்விரண்டு சான்றுகளும் தென்னிந்தியத் திராவிடர்களுடன் ஆரியர் கொண்டிருந்த உடற் கலப்பை உறுதி செய்யும்.

அர்ச்சுனன் வட இந்தியாவில் வாழ்ந்த பஞ்சபாண்டவர்களுள் ஒருவன். இவன் தமிழ்நாட்டில் தலைமை நாடாக இருந்த பாண்டிநாட்டு இளவரசி சித்ராங்கதையை மணந்துகொண்டான் என்ற நிகழ்ச்சி எண்ணத்தக்கது. அன்றியும் பிராமண ஆண், தனக்குக் கீழான இனப்பெண்களுடன் உடல்உறவு கொள்ளுவது தடுக்கப்படவில்லை. அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் அனுலோமர் என்று பிராமணர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டனர். பிராமணர் சூத்திரப்பெண்களை மணக்கக்கூடாது என்ற தடை இருந்தது. ஆனால், பராசர மிருதி இதனையும் அனுமதிக்கிறது.

தமிழர் திருமணங்களோடு பிராமணர்கள் புரோகிதராகத் தலைமை இடம் பெற்றிருந்தது மாந்தவியல் பார்வையில் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. திருமணத்தைப் புரோகிதரே அமைத்தார் என்ற கருத்தும், அண்மைக் காலம் வரை பெண்ணின் கழுத்தில் கட்டப்படும் தாலியைப் புரோகிதரே வாங்கிக் கட்டி முடித்து வந்தார் என்பதும் மனங்கொளத்தக்கவை. கோயில்களில் திருவிழாக்கள் நிகழும் போது விழா நாள்களில் யாருடனும் உடலுறவு கொள்ள அக்காலத்துக் கோயில் அடியாள்(தாசி)கள் ஒரு காலத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். கோயில்களில் அண்மைக் காலம் வரை இளம்பெண்கள் தேவரடியாள்களாகக் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்தனர். கோயில்கள் சிவாச்சாரியார் கையகத்து இருந்து வந்தன. சிவாச்சாரியார் குலத்துப் பிறந்த சுந்தரர் திருவாரூர் தியாகராயர் கோவிலில் தேவரடியாளாக இருந்த பரவைநாய்ச்சியாரைக் காதலித்த நிகழ்ச்சியும் இங்கே இணைத்து எண்ணத்தக்கது.

எனவே, தென்னிந்தியாவிலும், குறிப்பாகத் தமிழ்நாட்டி லும் கூட உடல் வழிப்பட்ட தனி இனம் என்று சுட்டுமளவிற்குத் தூய இனம் அமைந்தது இல்லை. உலகம் முழுதுமே கலப்பினந் தான். தூய இனம் என்பது ஆய்வுரையே தவிர வாழ்வுரையு மன்று ; வாய்மையுரையுமன்று.

ஏதேனும் ஒன்றிரண்டு கூறுகளால் நிற, உறுப்பு வேறு பாடுகளைப் பெற்றிருக்கும் மேலாண்மைக் குழுக்கள் தம்மை மட் டும் உயர்த்திச் சொல்லுவர். அதன் எதிர்ப்பாடாக ஏனைய இனக்குழு மக்களைத் தாழ்த்திச் சொல்லுவர். இஃது இன வேறு பாட்டிற்கு ஒரு முதன்மைக் காரணமாகும். இன்றும் இஃது உல கின் பல இடங்களிலும் கொடிகட்டிப் பறக்கிறது.

சீனர்களைப் போன்றே உயர்வு மனப்பான்மை ஐரோப்பிய வெள்ளையர்களிடம் இருந்தது. இந்திய உயர் சாதியினரிடமும் இருந்தது. தற்போது இம் மனப்பான்மையில் தொய்வு ஏற்பட்டி ருக்கிறதே தவிர இன்னும் தொலைந்துபோய் விடவில்லை.

ஒரு சில மாந்த இனக் குழுக்கள் வரலாற்றுக் காரணங்களால் பெரும்பான்மை மக்களின் அறியாமையினால் மரபு உரிமைகளால் அரசியலிலும், பொருளியலிலும், குமுகத்திலும், உயர்நிலையை அடைந்திருந்தன. இக் குழுக்கள் ஆளும் குழுக்களாகவோ அல் லது ஆளுவோர்க்குத் துணையிருக்கும் குழுக்களாகவோ தொடர்ந்து இருந்து வந்தமையால் பொருளியலில் உயர் நிலை யில் இருந்து வந்தன. பொருளியல் உயர்நிலையைக் கொண்டே குமுகத்திலும் உயர்நிலையை நிலைப்படுத்திக் கொண்டன. அத் துடன் இக் குழுக்கள் ஏனைய மக்களுக்குக் குறைவான ஊதியத்தை அளித்து அவர்களைப் பொருளியலில் பின்னடையச் செய்தன. பொருளியலில் நலிந்த இம் மக்கள் மேலே வளராத வண்ணம் அவ்வுயர் குழுவினர் கவனமாகப் பார்த்துக்கொண்டனர். இதற்கு மதமும், விதி போன்ற மதக் கொள்கைகளும் பெரிதும் துணையாக இருந்தன. கிரேக்கத்திலும், உரோமிலும் இந்தப் பின்னணியி லேயே அடிமைகள் உருவாக்கப்பட்டனர். இந்தியாவிலும் அடிமை முறை இருந்தது. வேத காலத்தில் தசியூக்கள் (தாசர்கள்) என்ற அடிமைகள் இருந்தனர். தமிழ் நாட்டிலும் அடிமைகள் இருந்தனர். அடியோர் என்ற பெயரீடும் உயர்ந்தோர், மேலோர் என்ற பெயரீடுகளும் இதனை மறைமுகமாக எடுத்துரைக்கின்றன.

தங்களுடைய அரசியல் தலைமையையும் அதிகாரத்தையும் நிலை நிறுத்திக் கொள்ள உயர்குழுக்கள் இன வெறுப்பைத் திட்ட மிட்டுப் பரப்பும். தென்னாப்பிரிக்காவிலும், தென்னமெரிக்காவி லும், ஏன் வட அமெரிக்காவிலும் கூட, இவ் வினவெறுப்பு பெரி தாகப் பரப்பப் பட்டிருக்கிறது.

இலங்கை அதிபர் செயவர்த்தனா தாம் சார்ந்த சிங்கள இனம் உயரியதான ஆரிய இனம் என்றும், இந்திரா காந்தியும் ஆரிய இனம் என்றும், தமிழர்கள் திராவிட இனம் என்றும் அண்மையில்

# திறனாய்வு !

மூலம் : இலியட்                    தமிழில் சி. நா. செந்தமிழ்ச் செல்வன்.

எந்தப் பாவலனும் கலைஞனும் தன்னுடைய படைப்புகளைத் தானே பெற்றிருக்கவில்லை. அவனுடைய முகாமையான படைப்புகள் கடந்த காலப் பாவலர்களுடனும் கலைஞர்களுடனும் தொடர்பு பெற்றிருக்கின்றன.

படைப்புகள் மனநிறைவளித்து மகிழ்வூட்டுகின்றன. படைப்பாளர்கள் உயர் இலக்கை உருவாக்குகிறார்கள். ஆனால் கலையின் பொருள்கள் இடைவிடாது மாறிக்கொண்டே இருக்கின்றன; பழமைக்கும் புதுமைக்கும் தொடர்பு இடையறாது இருந்து கொண்டுள்ளது.

கலைஞன் ஒவ்வொருவனும் மரபின் உணர்வைப் பெற்றிருக்க வேண்டும். 'மரபு' நாகரிகத்தின் ஓர் உறுப்பு. அதைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. அது நடைமுறை உடையது. 'மரபு' முழுமை யானது ; அத்துடன் அது வளருந்தன்மையது.

'இலக்கியம்' தனிப்பட்டவர்களின் படைப்புகளின் தொகுப் பன்று ; அஃது ஒரு முழுமை பெற்றது. உண்மையான படைப் பாசிரியர்களிடையே அவர்கள் அறியாமலேயே ஒருவகை ஒற் றுமை இருக்கின்றது.

இரண்டாந்தரக் கலைஞர்கள் உண்மையான படைப் பாளர்களை விட மிகவும் வேறுபட்டவர்கள். அவர்கள் முழுதும் தங்களை அறியாமலேயே கலைக்கு ஈகம் செய்வதில்லை. தன் முகா மையே அவர்களிடம் அதிகம். அவர்கள் தனிமையில் வேறுபாட் டுடன் வாழும் வாழ்வையே தேர்ந்தெடுத்துள்ளனர். அவர்களின் உலகு வேற்றுமை மண்டியது.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பிரித்துக் காட்டிப்பேசிய செய்தி இங்கே இணைத்துக் காட்டி நினைக்கத்தக்கது.

பிற இன மக்களைப் பற்றிப் பொய்யாகத் தாழ்வான செய் திகளை ஓயாமல் பரப்புவது, எழுதுவது, பேசுவது, தொடர்புக் கருவிகளால் விளம்பரப்படுத்துவது இவற்றின் மூலம் ஒரு குழு மக்களைப் பற்றிய தப்பு எண்ணங்களை ஏனைய இன மக்களிடம் பரப்பி விடுவது...சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் சீனர்களைப் பற்றி உயர்ந்த எண்ணமும் தமிழர்களைப் பற்றித்தாழ்ந்த எண் ணமும் திட்டமிட்டுப் பரப்பப் படுகின்றன. அண்மையில் தமிழ் நாட்டிலிருந்து வேலைக்கு ஆட்கள் வருவதைத் தடைசெய்த சிங் கப்பூர் அரசு, மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளி லிருந்து வரும் சீனர்களை வரவேற்பதை இதன் விளைவுக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

(தொடரும்)

பாவலன் ஒருவனின் கடன் வரலாற்றுணர்வை வளர்ப்பதும் அவன் வாழும் பெரும் பகுதியின் இலக்கிய மரபை வளர்ப்பது மாகும் ; திறனாய்வாளனின் கடன் எப்படி அப்பகுதியின் இலக்கிய மரபு பாவலன் ஒருவனால் பாவில் கையாளப்பட்டுள்ளது என்று ஆராய்ச்சி செய்தல் ஆகும். அதற்குத் திறனாய்வாளன் இலக்கிய மரபை நன்கு அறிந்தவனாக இருக்க வேண்டும்.

'திறனாய்வு' என்பது கருத்துகளை எழுத்துக் கலை மூலம் வெளியிடுதல் என்கிறார் இலியட். 'படைப்பு' என்பது ஒரு தன்னுரிமைச் செயற்பாடு. திறனாய்வின் நோக்கம் சுவைப்பைச் (taste) சரி செய்வதேயாம்.

'திறனாய்வு' ஞாயிற்றுப் பூங்காவன்று (Sunday park). அது கூட்டு முயற்சியுடன் செயல்பட வேண்டிய ஒரு துறை. திறனாய்வாளன் ஒவ்வொருவனும் காழ்ப்புணர்ச்சிகளையும் வெறித்தனங்களையும் போக்க முயற்சி செய்ய வேண்டும். இவ்விரு தீயவுணர்வுகளும் திறனாய்வாளனின் மனத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும்.

திறனாய்வாளன் ஒருவன் தான் கொண்ட கருத்து வேறுபாடுகளைத் தன்னுடனுள்ள திறனாய்வாளர்களிடம் கூற வேண்டும். குறிப்பிடத்தக்க கருத்து வேறுபாடுகள் முற்றிலும் அகற்றப் படக்கூடாது.

இலியட் மரபு வழியினர்; எனவே, கற்பனை வழியைத் தவிர்க்கின்றார். மரபு வழி கட்டுப்பாட்டுக்குள் இயங்குவது ; கற்பனை வழி அப்படியன்று ; மனம் போன போக்கில் போவது. மூரி (Murry) கற்பனை வழியினர் (Romanticist). கற்பனை வழியினர் உட்குரலை (Inner-vcice) நம்புகின்றனர். மரபு வழியினரான (Classcisist) இலியட் அதை நம்புவதில்லை. "பிரான்சில் மரபு வழிக் காலத்தில்தான் சிறந்த உரைநடை நூற்கள் தோன்றின" என்கிறார் இலியட்.

உட்குரலுக்கு யார் பணிகிறார்களோ அவர்களுக்குத் திறனாய்வு தகுதியானதாகாது. அவர்களுக்குத் திறனாய்வு மகிழ்ச்சி மிக்கதாக இருக்காது. ஏனெனில் திறனாய்வு நெறிகளின் அடிப்படையில் அமைந்தது. ஒருவன் மரபுக்கு மதிப்புக்கொடுக்கிறான் என்றால், அது தனி மாந்தனுக்கு அளிக்கப்படுவதன்று ; மாட்சிமை மிக்க மரபுக்கு அளிக்கப்படுவது. மாந்தனின் உட்குரலுக்கு ஊக்கங்கொடுப்பவர்கள் மாந்தனுக்கு மதிப்புக் கொடுக்கின்றனரேயன்றி மரபுக்கு மதிப்புக் கொடுப்பதில்லை.

படைப்பில் திறனாய்வுக்கு இடமில்லை என்கிறார் ஆர்னல்டு, இலியட் இதை ஒப்பவில்லை. படைப்பில் மாற்றுதல், திருத்துதல். சேர்த்தல், சரி செய்தல், தேர்வு செய்தல் ஆகிய செயல்கள் நிகழ்கின்றன ; அச்செயல்கள் திறனாய்விலும் நடைபெறுகின்றன.

படைப்பாசிரியனின் திறனாய்வு மிக உயர்ந்த திறனாய்வாக இருக்கின்றது. படைப்பாசிரியர்கள் சிலர் சிறந்த எழுத்தாளர்

களாகவும் (திறனாய்வுத்துறையில்) இருக்கிறார்கள். அதற்குக் காரணியம் அவர்களின் திறனாய்வுத்திறன் மேன்மை மிக்கதாக இருப்பதுதான்.

'பாடல்' எண்ணஆற்றலின் ஒட்டு மொத்தமான வெளியீடு. பாவலனின் கடமை மக்களுக்குப் புரியாததை புரிய வைப்பதும், வாழ்வை ஊடுருவிப் பார்க்கச் செய்வதும், உணர்வைத் தூய்மை செய்வதுமாகும். பாடல் சொற்கூற்றுக்காக (Expression) அன்று ! மறைவானவற்றைத் (Obscure) தெளிவாக எளிதில் விளங்கும்படி எடுத்து இயம்புவதற்கே !

திறனாய்வாளன் உண்மை உணர்வு மிக்கவனாக இருக்க வேண்டும். அதே அவனுக்கு முதல் தகுதி. அந்த உணர்வை வளர்ப்பது எளிதன்று ; அது மெல்ல வளரும் தன்மை உடையது. திறனாய்வுத்துறையில் முழுமை எய்தும் போது அ'து அவனை மிக உயர்ந்த நிலையில் வைக்கும்.

திறனாய்வின் உண்மைகளை மூலத்துடன் அடிக்கடி ஒப்பிட்டு எந்த அளவிற்கு அது பயனுள்ளதாக இருக்கிறதென்று திறனாய்வாளன் பார்க்கவேண்டும். புரியாத கடினமான பாடற்பகுதிகளை அவன் விரித்துரைக்க வேண்டும். அத்துடன் இலக்கியத்தில் பாவின் தனிமங்களைத் (elements) தக்கவாறு விரித்துரைக்க வேண்டும்.

திறனாய்வாளன் இக்கருவிகளைப் பெற்றிருக்கின்றான்; அவை ஒப்பிடுதலும், விளக்குதலும் (analysis) ஆகும். இலியட்டிற்கு முன்பே கவுர்மாண்டு என்ற பிரான்சு திறனாய்வாளர் திறனாய்வின் இவ்விரு கருவிகளைக் கூறினர். இவ்விரு கருவிகளையும் கவனமாகக் கையாள வேண்டும்.

திறனாய்வாளன் எதை ஒப்பிடவேண்டும் எதை விளக்குதல் வேண்டும் என்று அறிந்திருக்க வேண்டும். விரித்துரைத்தல்(interprets) தலையையும் கால்களையும் உடலில் தக்க இடத்தில் பொருத்துதல் போன்றது. மிகுந்த திறனாய்வுப் பொத்தகங்கள் விரிவுரைகள் மண்டியனவாகவே இருக்கின்றன.

உண்மைகள் பணிப்பெண்களைப் போன்று (hand-maids) நமக்குப் பணி செய்கின்றன. நாம் சேக்சுபியரின் சலவைச்சீட்டுகளை (Laundry Bills) பயனற்றதென்று கூறக்கூடாது ; ஏனெனில், நம்மினும் அறிவு மிக்கார் அதைக்கொண்டு வருங்காலத்தில் ஏதேனும் புதிய உண்மைகளை வெளியிடக்கூடும்.

இந்நாளில் பல திறனாய்வுப் பொத்தகங்கள் உள்ளன. அவை இரு தீமைகளைத் தம்மகத்தே கொண்டுள்ளன. ஒன்று அவை மக்கள் மனத்தைத்திசை திருப்பி மூல நூலை விட்டு நழுவச்செய்கின்றன. இரண்டாவதாக தனிப்பட்ட கருத்துகளை அறிவித்துவிட்டு மக்களிடையே உண்மையைப் பயிற்றுவிக்காதிருக்கின்றன.

# கொய்யாக்கனி

**நாடக ஆக்கம் : அதியமான்**

(பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியம்.)

உறுப்பினர்: 1. வள்ளி, 2. கிழவர், 3. மருக்கொழுந்து 4. சிங்கன்
இடம் : கிழவர் வீடு.

கருப் : (இரவில் திடீரென்று வந்து கதவைத் தட்டுகிறான்) கதவைத்திற.

மரு.கொழு : யாரது ?

கரு : திற. தெரியும்.

சிங் : (எழுந்து) திறந்தால் தெரியுமா ? (கதவைத் திறக்கிறான்) கருப்பனா ?

கருப் : கருப்பனேதான்.

கிழ. வள் : (எழுந்து விடுகிறார்கள்)

சிங் : காவலைக் கடந்து வந்து விட்டாயோ ?

கரு : ஆம். எங்கே மருக்கொழுந்து ?

மரு.கொழு : அத்தான் (ஓடிவந்து கருப்பனை அணைத்துக் கொள்கிறாள்)

கரு : அத்தான், செத்தான் என்றிருந்திருப்பாய் ?

மரு.கொழு : இல்லை. நான் செய்ததை எண்ணி ஏன் செய்தோம் என்று கவலையுடன் உறங்காமல் கிடந்தேன்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

வெறும் கருத்துகளை மட்டும் தெரிவிக்கும் திறனாய்வு சுவையைக் கெடுத்துவிடுகிறது. உண்மைகள் சுவையை மாசு படுத்துவதில்லை ; சுவையை நிறைவடையச் செய்கின்றன.

குறிப்பு :- இக்கருத்துக்கோவை தாமசு இசுடேன் இலியட் (T. S. Eliot) என்ற இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த ஆங்கிலப் பாவலரின் "The Function Criticision" என்ற உரைநடை நூலில் இருந்து தமிழில் உருவாக்கப்பட்டது. இலக்கியத்திற்காக இவர் நோபல் பரிசு பெற்றவர். பயனற்ற நிலம் (The Waste Land) மாகிப் பயணம் (Journey to Magi), புரைமாந்தன் (Hollow man) முன்னுரை (Prelude) போன்ற பாடல்களை யாத்துத்தந்தவர். கோயிலில் கொலை (Murder in the Cathedral) போன்ற நாடகங்களை வடித்துத் தந்தவர். புனித மரம் (The Sacred wood) போன்ற திறனாய்வு நூல்களையும் எழுதி அளித்தவர். இவருடைய படைப்புகளில் இருபதாம் நூற்றாண்டின் சிக்கல்களை அறியலாம். மரபைக் காக்கும் மனஉறுதி கொண்டவரும் இவரே ! ○

கருப் : சிங்கா, நான் காவலைக் கடந்து இங்குவந்ததைக் கூறி விடாதே.

சிங் : அடுத்து உன் திட்டம் ?

கரு : நான் செய்த கொடுஞ் செயல்களை யெல்லாம் எண்ணிப் பார்த்தேன். நீண்டநேரம் எண்ணினேன். எண்ணத்தில் நல்லன தோன்றிட இனி செம்மையாக வாழ எண்ணிவிட் டேன். மருக்கொழுந்து இங்குதான் இருப்பாள் எனஎண்ணி வந்தேன். எடுத்த என் திட்டம் யாருக்கும் தெரியாமல் வெளியூர் சென்று மருக்கொழுந்தோடு வாழ்வது ; இதுவே என் முடிவு.

சிங் : வேண்டாம் கருப்பா. விடிந்ததும் நான் மன்றத்தாரைக் கண்டு உன் திருந்து மொழியைக் கூறுகிறேன். உன்னை மன் னிக்க வேண்டுவேன். கரந்து வாழ்வதை விட எல்லோரும் காண வாழ்வதே நல்லது. நீ திருந்தி வாழ்வது சிறப்பே யாகும்.

வள் : ஆம். அண்ணா ! வாழ்வதற்குப் போதுமான வயல்களும், செல்வங்களும் இங்கிருக்க ஏன் வெளியிடஞ் செல்ல வேண் டும் ? உணவிற்கு அலைந்து தங்க வீடின்றி அலையவேண்டுமா? விடிந்ததும் மன்றப் பெரியோர்களைக் கண்டு பேசிக்கொள்ள லாம்.

மரு.கொழு : வேண்டவே வேண்டாம். இந்த ஊரில் இருந்தால் இன்னும் பல இடர்கள் வரும். அதனால் வெளியூர் சென்று நாங்கள் வாழ்ந்தாலும், உன்னையும் உன் அத்தான் சிங்கனை யும் பார்க்க வருவோம்.

கருப் : ஆமாம் வள்ளி. நாங்கள் வருகிறோம். (முன்நடக்கிறான்)

மரு.கொழு : (சிங்கனைநோக்கி) அண்ணா நாங்கள் வருகிறோம். வள்ளி விடை கொடு சென்று வருகிறோம்.

சிங். வள் : சரி. உங்கள் விருப்பம். போய் வாருங்கள்.

கரு. மரு.கொ : (போகிறார்கள்)

சிங். வள் : (மருக்கொழுந்தும், கருப்பனனும் போய் மறையும் வரை வாயிலில் நின்று பார்த்துக் கொண்டிருந்து வீட்டிற் குள் போய் விடுகிறார்கள்.)

காட்சி கூக

உறுப்பினர் : மன்றப்பெரியவர்-1. மற்றும் பலர். காவலர். சிங்கன், மருக்கொழுந்து.

இடம் : ஊர் பொதுஇடம்.

காவ : (பெரியவரிடம் வந்து) கருப்பனன் தப்பி விட்டான்.

பெரி-1 : அப்படியா ! ? என்ன காவல் செய்கிறீர்கள் ? குற்ற வாளியை விட்டு விட்டு குற்றஞ்செய்யாதவனைப் பிடிப் பீர்கள். ஓடுங்கள் ! ஓடுங்கள் ! தேடிப்பாருங்கள் !

காவ : நீங்களும் வாருங்கள்.

பெரி-1 : (காவலனையும் மன்றவர்களையும் நோக்கி) நான் நேரே கருப்பனன் வீட்டிற்குப்போகிறேன். அங்கு அவன் வந்த துப்புகள் கிடைக்கின்றனவா என்று ஆராய்கிறேன். நீங்கள் எல்லா இடங்களையும் பார்த்துவிட்டுக் கருப்பனன் வீட்டிற்கு உடனே வந்து சேருங்கள்.

பெரி-1 , சிலர் : (பெரியவர் மற்றும் பலர் விரைந்து கருப்பனன் வீடு போகிறார்கள். கருப்பனனுடைய வீட்டு வெளி வாயில் திறந்திருக்கிறது. உள் வீட்டிலிருந்து அரத்தம் வெளிவருகிறது. அதைப் பார்த்துவிட்டு) ஆ ! உள்ளே கொலை நடந்திருக்கிறது. கதவை உடையுங்கள்

சிலர் : (கதவை உடைத்துத் திறக்கிறார்கள்.)

கருப். , மரு.கொழு : (இறந்து கிடக்கிறார்கள்)

பெரி-1 : கருப்பனன் மருக்கொழுந்தைக் கொலை செய்துவிட்டு அவனும் தற்கொலை செய்து கொண்டான். தப்புச் செய்தவன் எப்படியும் தப்ப முடியாது. இவன் வாழ்க்கை முடிந்தது. இரண்டு பிணங்களையும் கொண்டு போய்ப்புதைத்து விடுங்கள்.

சிங். , வள் : (அங்குவந்து கண்ணீர் விடுகிறார்கள்)

வள் : அத்தான் ! இசையாத பெண்களை அழித்தலும், இரக்கமில்லாமல் அம்பால் எய்யக்கூடாத மானை எய்து கொல்லுவதும் கருப்பனனுடைய செயல்களாக இருந்தன. என் போன்ற கொய்யாக்கனிகளைக் கொய்ய முடியாமல் கொலை செய்தவன், மாண்டதில் தவறும் இல்லை. வியப்பும் இல்லை. ஆனால் பிறர் நலம் பேணித் தன் உயிரைப் போக்கிக் கொண்ட மருக்கொழுந்து மாண்டதுதான் கவலை. இவளுக்கு நம் தோட்டத்தில் சிலை வைக்க வேண்டும்.

சிங் : அப்படியே செய்வோம்.

(மருக்கொழுந்துக்குச் சிலை வைக்கப்படுகிறது)

(நாடகம் நிறைவடைகிறது.)

நாடக முடிவுரை.

கொய்யாக்கனி பாவியத்தை பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தம் பதின்மூன்று பதினன்காவது அகவையில் எழுதினதாக நூலின் வரலாற்று முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்கள். அது பலரால் படிக்கப்பட்டு மீண்டும் படிக்க நினைவற்றிருப்பர். இந்நூலை நான் படித்தவுடன், அதனை நாடகமாக எழுத வேண்டும் என்று அப்பாவியமே என்னைத் தூண்டிற்று. கரணியம் குமுகாயச்சூழல்களை ஐயா அவர்கள் அதில் எழுதிஇருக்கிறார்கள். அக்காலத்திலேயே இப்போது நடைமுறையிலிருக்கும், சூழல்களை தொலை நோக்கோடு காட்டி யிருக்கிறார்கள். அதனால் இது பாவி

யமாக இருந்தாலும், படிப்பவர் குறைவாகவே இருப்பார்கள் என்பது என்னுடைய எண்ணம். மேலும் எப்போதோ படித்த அப்பாவியத்தைத் திரும்பவும், அன்பர்கள் படிக்க ஒரு வாய்ப்பை அளித்திட நாடகம் புத்தாவலைக் கொடுக்கும் என்று கருதினேன். அதனால் இம்முயற்சியை மேற்கொண்டேன். ஐயாவின் முன் இசைவு இல்லாமலே சில காட்சிகளை எழுதியனுப்பி விட்டேன். உடன் என் நாடகம் தென்மொழியில் வெளியிடப் போவதாக அறிவித்தார்கள். நான் அப்பேற்றை எண்ணிப்பெருமிதங் கொண்டேன்.

நாடகம் தூயதமிழில் இருக்கவேண்டும் என்பதற்காக, திரு வாட்டி நீலாம்பிகை அம்மையாரின் வடசொல் தமிழ்சொல் அகர முதலியையும், திருவாளர் அருளி அவர்களின் 'இவை தமிழல்ல' என்னும் அகரமுதலியையும், பாவாணர் அவர்களின் வடமொழி வரலாறு என்ற நூலையும் துணைக்கு வைத்துக்கொண்டேன். அவ் வப்போது தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு ஆகிய தாளி கைகளில் வரும் தூயதமிழ்ச் சொற்களையும் தெரிந்து நாட கத்தைத் தூய்மையான தமிழில் எழுதி முடித்திருக்கிறேன். உரையாடல்கள் பேச்சுவழக்கில் அல்லாமல் எழுதுவது போலவே பேச்சுகளை அமைத்திருக்கிறேன். எனவே இந்நாடகம் படிக்க மட் டுமே பயன்படும் என்றிருந்தேன்.

சென்னை பெரியார் திடலில் 1986 திசம்பர் 27, 28ஆம் பக் கலில் நடந்த உ. த. மு. க. கருத்தரங்கில் நான் கலந்து கொண்ட போது தென்மொழி அன்பர்கள் சிலர் இந்நாடகத்தை நாடகமாக மக்களுக்கு நடுவில் நடிக்க இருப்பதாய்க் கூறினர். ஐயாவின் பாவியம் நாடகமாக நடிக்கப்பெற்றால், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இஃது ஓர் ஆக்கமாகும் நன்முயற்சி. அது மட்டு மன்று, ஐயா அவர்களின் படைப்புகளை மக்களுடைய நடுவிற்குக் கொண்டு சென்றால், தனித்தமிழ் வளர்ச்சிக்கும் குமு காய சீர்த்திருத்தத்திற்கும் இஃது ஓர் உரமாக அமையும் என் பதை நான் சொல்லாமலே அன்பர்கள் புரிந்திருப்பார்கள்.

எனவே அவ்வகை ஒரு முயற்சி நடைபெறுமானல் தென் மொழி அன்பர்களைப் பாராட்டிப் புகழ வேண்டும். ஏனென்றால், கொய்யாக்கனி நாடகத்தை நடிப்பது ஓர் அரிய முயற்சியே. ஏனென்றால், கொச்சைத்தமிழ்ப் பேச்சுகள் இதிலில்லை. கடுமை யான பயிற்சிக்குப் பின்னரே இதை வெளி அரங்கத்திற்குக் கொண்டு வர இயலும் என்பதும், தென்மொழி, தமிழ்ச்சிட்டு. தமிழ்நிலம் வழக்கமாகப்படிப்பவர்களே இந்த முயற்சியில் வெற்றி பெறுவர் என்பதும் என்னுடைய கணிப்பு. ஆகவே அம்முயற்சி செய்யும் உ. த. மு. க. அன்பர்களும் தென்மொழி அன்பர்களும் பாராட்டப்பெறுவார்கள். இஃது ஓர் அரிய முயற்சியுமாகும். அதுமட்டுமன்று ஒரு தூய தமிழ் நாடகத்தையும் மக்கள் கண்டு களிப்பர்.

—அதியமான்.

# துணிந்து வருக தமிழினமே

-எழில்வாணன்-

1. உரிமை பறித்தே உனைவீழ்த்தி — உன்
முன்னோர் பெருமை தனைவீழ்த்தி
அடிமை நிலையில் நிதம்வைத்து — உன்
ஆற்றல் அறிவைத் திசைதிருப்பி
மடமைச் சேற்றில் விழவைத்து — நல்
வாழ்வை — தமிழை அழிக்கின்றார் !
கொடுமை இவற்றை அறியாமல் — தமிழா,
கொடியோர் வலையில் விழுந்தாயே !

2. சூடு சுரணை உணர்விழந்து — நீ
துளியும் தமிழை நினையாமல்
மாடு போல வாழ்வதற்கே — உனக்கு
வழிகள் பலவாய் அமைக்கின்றார் !
'பீடு பாரீர் !' எனப்பிதற்றி — உன்
பேதைக் குணத்தில் குளிக்கின்றார் !
ஓடி உழைக்கும் தமிழ்மறவா, — நீயும்
உணர்ந்து பார்க்கும் நிலையென்றோ ?

3. தமிழை அழிக்கும் வகையினிலே — பல
சட்டம் இயற்றி வாயடைத்துத்
'தமிழா, நீயும் இந்திபடி ! — உன்
தகுதிக் கேற்ப வேலைவரும் !
தமிழை நம்பி நீயிருந்தால், — பெருஞ்
சாவே உனக்குக் கைகொடுக்கும் !
தமிழால் சிறிதும் பயனுண்டோ ?' — எனச்
சாற்றி உன்னை வீழ்த்திவிட்டார் !

4. பகைவர் பலரின் வஞ்சனையால் — நீ
பனியைப் பொறுக்க முடியாமல்
வகையாய் நெருப்பில் விழுந்தாயே ! — உன்
வாழ்க்கை நலனை இழந்தாயே !
பகையும் நட்பும் ஒன்றாமோ ? — தமிழா,
பகுத்தே அறிய மறந்தாயே !
குகையில் வாழ்ந்த நாள்போதும் ! — இனிக்
குமுறி யெழுந்து வருவாயே !

5. உலகின் எந்த மூலையிலும் — தமிழன்
உயர்ந்து விளங்கக் கூடாதாம் !
கலையில் மொழியில் தமிழருமே — சொந்தக்
காலில் நிற்கக் கூடாதாம் !

கொலையும் செய்தே அதையொழிக்கப் — பெருங்
கூட்டம் இன்று விரைகிறதே !
அலைபோல் அலையும் தமிழினமே, — இதை
அறியா திருத்தல் ஏன்தானோ ?

6. இனியும் ஏனோ வேற்றுமையும் ? — நமக்குள்
ஏற்றத் தாழ்வு போட்டிகளும் ?
குனிந்து வாழ்ந்த நிலைபோதும் ! — தமிழா,
கூடி நமக்குள் ஒன்றிணைவோம் !
பணிந்து தமிழ்முன் சூளுரைப்போம் ! — நாம்,
படைபோல் சூழ்ந்தே பகைமுறிப்போம் !
துணிந்து வருக தமிழினமே ! — ஒரு
துயரம் இனிமேல் நமக்கிலையே !

# தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் சலுகை விலை விற்பனை!

வரும் ஆண்டுப் பொங்கல் விழாவை முன்னிட்டு, இருப்பில் உள்ள தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களைச் சலுகை விலையில் விற்பனை செய்யத் தீர்மானித்துக் கீழ்க்காணும் முடிவுகளை அறிவிக்கிறோம்.

அண்மையில் உறுப்பினர் ஆன அன்பர்கள், இனிமேல் உறுப்பினர் ஆக விரும்புகிறவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் படிப்பக உரிமையாளர்கள், வேறு இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் அனைவரும்—இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

நீங்கள் செய்ய வேண்டுவது, தென்மொழிக்கு ஓராண்டுக்குப் புதிய உறுப்பாண்மைக் கட்டணம் உரு 20. ஐ-அனுப்புவதோடு,—

தென்மொழி பழைய (சுவடி 4 முதல், சுவடி 10 முடிய) சுவடிகளின் 50 இதழ்கள், அனுப்புச்செலவும் சேர்த்து, உரு 15—மட்டுமே அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

அதேபோல், தமிழ்ச்சிட்டுக்கும் ஓராண்டுப் புதிய உறுப்பாண்மைக் கட்டணம் உரு 9— அனுப்புவதோடு,—

தமிழ்ச்சிட்டு பழைய (குரல் 2 முதல், குரல் 10 முடிய உள்ள இதழ்களில்) 50 இதழ்களை, அனுப்புச்செலவும் சேர்த்து உரு 7.50-மட்டுமே அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ்நிலம் பழைய படிகளின் சலுகை விற்பனை விலை பின்னர் அறிவிக்கப் பெறும்.

—அமைச்சர்.

மனவியல்

# நல்ல குணங்களைப் பாராட்டுங்கள்.

நியூயார்க்கு நகரத்திலே இருந்த மனவியல் மருத்துவர் ஒருவரிடத்தில் கருத்துக் கேட்பதற்காக இளம்பெண் ஒருத்தி வந்தாள்.

''நான் ஒரு தொழிற்சாலையின் தலைமை அதிகாரியிடம் சுருக்கெழுத்தாளராக வேலை பார்க்கிறேன். என்னுடைய அதிகாரி ஒரு சிடுமூஞ்சி. எனக்கு அவருடைய வெகுளித் தாக்கங்களை யெல்லாம் தாங்க முடியவில்லை. அவருடைய கொடுங்கோன்மையை நினைத்தால் இரவில் தூக்கங்கூட வருவதில்லை; வேலையை விட்டு விட வேண்டும் என்னும் தீர்மானத்திற்கு வந்திருக்கிறேன். அதற்கு முன்னர் உங்கள் கருத்துகளையும் கேட்கலாமே என்று வந்தேன். என்ன சொல்கிறீர்கள் ?''—என்று பரபரப்போடு கேட்டாள்.

அதற்கு அந்த மனவியல் அறிஞர், ''அம்மா, நான் ஓர் உத்தி சொல்கிறேன். அதன்படி மூன்று மாதங்களுக்குத் தொடர்ந்து செய்து வா. அதன் பிறகு என்னிடம் வா. தேவையானால் பிறகு வேலையை விடுப்பதைப்பற்றிச் சிந்திப்போம்'' என்றார்.

அவர் சொன்ன உத்தி இதுதான்.

'சிடு மூஞ்சியிடத்திலும் சில நல்ல குணங்கள் பதுங்கிக் கொண்டிருக்கும். அவற்றைக் கண்டுபிடித்து, வாயார அவற்றைப் பாராட்டு. ஒரு நாளைக்கு ஒரு பாராட்டு என்று வைத்துக் கொள்'— என்று சொல்லியனுப்பினார்.

இந்தக் கருத்துளவை மேற்கொள்ளத் தலைப்பட்டாள் அந்தச் சுருக்கெழுத்துப் பெண்.

மறுநாள் அவர் அலுவலகம் சென்றாள். அவள் அதிகாரி அணிந்திருந்த சட்டை அழகாக இருந்தது. அதை உள்ளன்போடு பாராட்டினாள். அடுத்த நாள் அவ்வதிகாரியுடைய ஆங்கில நடையின் நுணுக்கத்தை உணர்ந்து பாராட்டினாள். இப்படியாகப் பாராட்டு ஏற ஏற, அவள் அதிகாரியின் சிடுமூஞ்சித் தன்மையும் குறைந்து கொண்டே வந்தது. கதையை வளர்ப்பானேன். சிடுமூஞ்சியாயிருந்தவர் காதலனாகி விட்டார்.

மூன்று மாதங்கள் கழித்து மனவியல் மருத்துவரிடம் அப் பெண் வந்தாள்.

''என்னம்மா, வேலைவிடுப்புச் செய்ய வேண்டியதுதானே'' என்று கேட்டார் அவர்.

''ஐயா, வேலையை விடுப்பதா ? என்னை அவர் நாளைக்குத் திருமணம் செய்து கொள்ளப்போகிறார். பாருங்கள் இதை''— என்று சொல்லி அவர் பரிசாகக் கொடுத்திருந்த வைர மோதிரத்தைக் காட்டினாள். பரிவினால் வந்த விளைவை அது ஒளிவீசிக் காட்டிக் கொண்டிருந்தது.

நம்மைச் சுற்றியுள்ளவர்களிடத்தில் நம்மைப் போலவே, பல குற்றங்கள் இருக்கலாம். அவற்றைக்கொஞ்ச நேரமாவது மறந்து

விட்டு, அவர்களிடமிருக்கும் ஒரு துளி நல்ல குணத்தை முயன்று கண்டு பிடித்து, நாம் பாராட்டக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தப் பழக்கத்தைக் கைக்கொண்டால், நம்மிடமிருக்கும் பொறாமைக்குணம் நம்மை விட்டு அகலும்; நல்லுணர்வு பெருகும்; அதனால் வாழ்க்கையில் மகிழ்ச்சி பொங்கும்.

—நடுவர் மகராசன். நன்றி, ஆனிமன். நவ-'87


**மிகச் சிறந்த ஓமியோபதி மருத்துவ மாத இதழ்!**

## ஆனிமன்

ஆசிரியர் : மருத்துவர். மர்சியால் (C.C.G.P. France)

அரிய ஓமியோபதி மருத்துவக் கட்டுரைகள், உடல்நோய் பற்றிய விளக்கங்கள், உடலியல், உறுப்பியல் கூறுகள், மனவியல் உண்மைகள் — முதலிய செய்திகளை மாதந்தோறும் தாங்கி வருகின்றன.

ஆண்டுக் கட்டணம் : 18 உருபா.
தனிப்படி 1. 50.
மலேசியா, சிங்கப்பூர், பிரான்சு, மோரீசு— முதலிய அயல் நாடுகளுக்கான ஆண்டுக் கட்டணம். 100 உருபா.

பிற விளக்கங்களுக்கு,
மருத்துவர் மர்சியால் மரியபிரகாசம்.
3. ரோசரி வீதி, புதுச்சேரி-605 003.


## தனித்தமிழ் இலக்கியக் கழகம், பாளையங்கோட்டை
## கல்லூரி மாணவர் கட்டுரைப் போட்டி.

ஒவ்வோராண்டும், நெல்லைத் தனித்தமிழ்க் கழகம் தூய தமிழ் வளர்க்கும் நோக்கத்துடன், கல்லூரி மாணவர்க்கான கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தி, முதல் தகுதி பெறும் எழுத்தோவியத்தை உருவாக்கும் மாணவர்க்கு, ஆயிரம் உருபா பரிசளிப்பும், அவர் பயிலும் கல்லூரிக்குச் சுழற்கோப்பையும் வழங்குகிறது.

இவ்வாண்டும் அத்தகைய போட்டி நடைபெற விருக்கிறது.
கட்டுரைத் தலைப்பு :

தமிழ்க் கா. சு. அவர்களின் தமிழ்த் தொண்டு.

கட்டுரை வந்து சேர்வதற்குரிய இறுதிநாள் 31.12.87.

பிற விளக்கங்களுக்கு

பேரா. பா. வளன் அரசு.
தலைவர், தனித்தமிழ் இலக்கியக் கழகம்,
1-அ. நெல்லை நாயனுர் தெரு, பாளையங்கோட்டை,
திருநெல்வேலி-2.

# எழுவாய் தமிழினமே!

-வள்ளிகேள்வன்-

1. அமைதிப்படை எனும்போர்வையில் அழிம்பே புரி கின்றார்;
தமிழன்னுயிர் புழுவேனத் தருக்கித்திரி கின்றார் ;
உமைக்காத்திடும் உடன்பாடெனும் தேனூறிய பேச்சில்
நமையாழ்த்திடின் இனம்வீழ்ந்திடும் நாயிற்கடை யாவோம்!

2. நஞ்சிட்டுயிர் அறமாய்ந்தனர் நயன்மைத்தமிழ்ப் புலிகள் ;
வஞ்சத்தொரு வடிவாயுள வடஆரியக் கயவர்
எஞ்சித்தமிழ் இனம்வாழ்ந்திடக் கூடாதெனும் கொலைஞர்
பஞ்சிட்டடை பொதியேஎனப் பகைவர்க்கரண் ஆனார் !

3. நகர், திம்புவில் வடஆரியர் நிழல்நாடகம் ஆடிப்
பகைச்சிங்களர் அவரோடுற வாடிப்பழி செய்தார் ;
உகிரோடெழும் ஈழத்தமிழ் வரிமாக்களின் வீரத்
தகைமைத்திறம் நயன்மைத்திறம் தாளாதவர் ஆனார் !

4. ஏட்டில்இனி அடங்காதெனும் கொடுமைக்கிரை யாகி
மீட்டுத்தமிழ் ஈழந்தனில் மீண்டும்புது வாழ்வை
நாட்டிக்கொள எண்ணிச்சம ராடும்பொழு தன்றோ
கேட்டைத்தரும் உடன்பாட்டினை வடவோன்திணித்
திட்டான் !

5. தமிழ்ப்பகுதியில் சிங்களர்தமை ஏற்றும்உடன் பாடு
தமிழ்க்குடியினர் இனஉணர்வினை மிதிக்கும்உடன் பாடு !
இமைச்சிறகிலும் மறந்துளும்பிடும் மறவோரிடம் காழ்ப்பு
சுமைதழுவினும் தடைபெருகினும் தமிழீழம்நம் தீர்ப்பு !

6. கூலிக்கென ஒப்பாரிகள் வைக்கும்குறை மதிஞர்,
ஞாலம்புகழ் செய்கை, இன மானம், துறந் தவர்கள்,
கோழைத்தனம் ஒன்றேகுணம் என்றேகொளும் தனியர்,
போலிக்கர வுடன்பாட்டினைப் போற்றிப்புகழ் பொழிவார் !

7. விடுதலைப்புலி எனும்பெயரினை வெறுக்கும்கொலை வடவர்
கெடுதலைத்தரும் துயர்அறும்படி விடுதலைஅமைப் பவரோ ?
கெடுதலைத்தரும் பழியுணர்ச்சியில் அலவோதவ றுன
சுடும்பழிகளை விடுதலைப்புலி மிசையேற்றினர், தமிழா !

8. வேழந்தனைக் கொலைஓரிகள் கூடிப்பொரு தாலும்
ஈழந்தனை மீட்போம்எனும் இலக்கேஉயிர் மூச்சு !
யாழ்ப்பாணமும் கவர்வோம்எனும் கொலைஇந்தியப்
படையை
வீழ்த்தாதினி வாழ்வேயிலை எழுவாய்தமிழ் இனமே !

# அறிவியல் தமிழ்

நூல் : அறிவியல் தமிழ்.
ஆசிரியர் : பர். வா.செ. குழந்தைசாமி.
வெளியீடு : பாரதி பதிப்பகம்.
108, உசுமான் சாலை, தியாகராயநகர்,
சென்னை : 17.
விலை : உருபா 12.50.

அறிவியல் உணர்வுக்கு எந்த வகையாலும் நாம் மாறுபட்டவர்களல்லர். அறிவியல் உணர்வு மக்களாகப் பிறந்த அனைவர்க்குமே தேவை என்பதில் நாம் யாரையும் விடத் தாழ்வுற்றவர்களுமல்லர். ஆனால் அறிவியல் உணர்வு, அறிவியல் செயலாக மலர்ச்சியுறும் பொழுதுதான், அந்நடவடிக்கை எது, எதற்குத் தேவை, எவ்வளவில் தேவை, எவ்விடத்தில் தேவை, எக் காலத்தில் தேவை என்பதை நாம் எண்ணிப்பார்த்தல் வேண்டும்.

அறிவியல் மாற்றங்களுக்குத் தேவையான கூறுகள், நம் வாழ்வியலில் கலந்து கிடக்கலாம். முதலில் அறிவியல் கற்றதாகக் கூறிக்கொள்ளும் அறிஞர்கள் அவற்றை இனங்கண்டு பிரித்துணர்தல் வேண்டும். பிரித்துணர்ந்து வகைப்படுத்திக் கொண்ட பின் அவையவற்றுக்கு எவ்வெவ்வளவில் மாற்றங்கள் அல்லது புத்தமைப்புகள் தேவைப்படலாம் என்பதை அவரவர்களுக்குள்ளாகவே கலந்து பேசி முடிவு செய்து கொள்ளுதல் வேண்டும். இவ்வழியில்லாமல் அறிவியல் கற்று விட்டோம் என்பதற்காக ஒட்டு மொத்தமாக, நம் வாழ்வியலுக்குப் பயன்படும் அத்தனைக் கூறுகளிலும் அறிவியலைப் புகுத்திவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு இறங்கிவிடுதல் கூடாது.

இங்கு இன்னோர் இடர்ப்பாடு தலைதூக்கியுள்ளது. எங்கோ தமிழையும் அறிவியலையும் கலந்து படித்துவிட்ட கரணியத்தால், தங்களின் அறிவியல் நோக்குகளை எடுத்த எடுப்பிலேயே தமிழ் மொழியில் செலுத்தத்தொடங்கி விடுகின்றனர். தமிழ்மொழியை அறிவியல் கண்கொண்டு பார்க்கக் கூடாது என்பது நம் கருத்தன்று. மொழி ஓர் அறிவுத் தொடர்புக்கருவி என்று நினைக்கும் அதே பொழுதில், அதை ஓர் உணர்வுத் தொடர்புக் கருவி என்பதையும் மறந்து விடுதல் கூடாது. மாந்த உணர்வு என்பது ஏற்கனவே மரபு வழியாகப் படிநிலை வளர்ச்சி பெற்று, ஓர் அருவ வடிவமாக, மொழிவழி, ஓர் இனத்தைப் பற்றி வளர்கிறது ; இனத்தையும் வளரச்செய்கிறது என்பதை எந்தநிலையிலும் நாம் மறந்துவிடுதல் கூடாது. திடுமென அதற்குள் ஏதோ ஒருவகையில் ஊடுருவல் செய்து, ஏற்கனவே வளர்ந்து ஒரு வடிவம் எய்தியிருக்கும் அமைப்புகளைச் சிதைப்பது மாந்தனின் சிந்தனை வளர்ச்சியையே தடைப்படுத்துவதாகும். மாந்த மனத்தின் சிந்தனை வளர்ச்சி தடைப்படும் பொழுது, மாந்த மனமே திரிபடைகிறது. (விகாரம் அடைகிறது.) சிந்தித்துக் கொண்டிருக்கும் ஒருவரிடம், வேறொரு-

வர் வந்து வேறு செய்தி அல்லது செயல்களை இடையீடுபடுத்து-வாராஞல், அந்தச் சிந்தனையோட்டம் எவ்வாறு தடைப்படுத்தப் பட்டுத் திசை திரும்பி இடர்ப்படுமோ அப்படி, ஓர் இனத்தொடு இரண்டறக் கலந்துள்ள மொழிச்சிந்தனை அஃதாவது மொழி யுணர்வை அடிப்படையாகக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கும் கருத்தோட்ட வளர்ச்சி, முனை மழுங்கித் திகைந்து திசைமாறி, உருச்சிதைந்து போகும் என்பது குமுகாய மனவியல் உண்மையா கும். இஃது எந்த அளவில் வேறுபடும் என்பதை எந்த அறிவியல் கருவியாலும் அளந்துகூற முடியாது என்க.

ஒரு மொழி, அதன் இனப் பயில்வுக்கு அப்பால், பிறர் கற்கப் புகும்பொழுது, சிற்சில மொழியொலித் தடைகள், வரியொலித் தடைகள், கருத்தமைதிகள், ஏற்படுவதைத் தடுக்க முடியாது. ஆனுல் அதற்காக, அவர் பிறர் கற்கவேண்டும் என்பதற்காக, நம் பலர் மரபுவழிப் பயின்று கொண்ட நிலைகளை—எழுத்தளவானும், சொல்லளவானும், இலக்கண அளவானும் மாற்றியமைப்பது தான் வளர்ச்சியென்பதும், இயற்கைக்குப்பொருந்துமாறு இல்லை.

நம் வீட்டிற்குள் புதியவராக வரும் விருத்தாளிக்கு நம் வீட் டின் உள் அமைப்புகளும், சுழிவு நெளிவுகளும் புழக்க விடங்களும் அவர் வீட்டில் உள்ளது போல் இல்லாமலும் புதியனவாகவும் தாம் இருக்கும். ஆனுல், அதற்காக, அவர் புழக்கத்திற்கும் பழக் கத்திற்கும் உகந்த வகையில் நம் வீட்டமைப்பை மாற்றிக் கொள்ள முயல்வது எத்துணை அறியாமை ! எண்ணிப் பார்மின் !

அவ்வகையில், நம் வீட்டுக்கு வரப்போகும் விருந்தாளிகளில் ஒருவர் 7அடி உயரமிருக்கின்ருர் என்பதற்காக, நம் வீட்டு வாயிற் படியை ஏன் 6 அடியிலிருந்து 7 அடிக்கு இடித்து உயர்த்துக் கட்ட வேண்டும் ? அவ்வொருவர் போன்ற உயரமுள்ளவர்கள் குனிந்து வரலாமே ! நாம் நம் வீட்டில் நிலையாகக் குடியிருக்கின்ருேம். வரு பவர் தற்காலிகமாக வந்து விட்டுப் போகிறவர். அவர் போலிய ருக்காக நிலையாக உள்ள நாம் மாறுவானேன் ? அல்லது நம் வாழ் வியல், அறிவியல் கருவியை நாம் மாற்றிக் கொள்வானேன் ?

அதுபோல், வேற்று மொழியினர் அல்லது நாட்டினர் நம் மொழியைப் படிக்க வேண்டும் என்பதற்காக, நாம் நம் மொழி மரபு நிலைகளை எழுத்து, கருத்து என்னும் அளவிலெல்லாம் மாற் றிக் கொண்டுதான் ஆகவேண்டும் என்பது அறிவாண்மை ஆகுமா ?

எழுத்தை மாற்றுவதால் மொழி முன்னேறி விடாது. மொழி முன்னேற அம்மொழி பயிலும் இனத்தின் மக்கள் முன்னேற வேண்டும். தமிழினம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் முன்னேறித் தான் இருந்தது. பிற இன மக்களெல்லாம் காட்டு விலங்காண்டிக ளாக, உணவுக்காகவும் உறையுளுக்காகவும் காடு மேடெல்லாம் அலைந்து திரிந்து கொண்டிருந்த அக்காலத்திலெல்லாம், தமிழி னம், நாகரிகத்திலும், பண்பாட்டிலும், வாழ்வியலிலும், கல்வியி

லும் முன்னேறியிருக்கவில்லை என்று எவராவது சொல்ல முடியுமா? இன்று ஏன் அந்த அளவு முன்னேற்றம் தெரியவில்லை. அம் முன்னேற்றம் பின்னிறக்கமாகிப் போனதற்கு யார் காரணம்? மொழியா?

தமிழின முன்னேற்றத்தைத் தடுத்துக் கொண்டிருப்பது தமிழ் மொழியன்று;

—அவ்வினத்தை அடிமைப் படுத்திக் கொண்டிருக்கும் அரசியல் வல்லாண்மை, பொருளியல் சுரண்டல், சாதி, மதக்கோட்பாடுகள், பழைய பார்ப்பனீய, புதிய பார்ப்பனிய முதலாளியம், ஏதோ ஒரு புதிய உலகத்தைக் காட்டுவதாகக் கூறும் அறிவியல் படித்த—ஆனால் இனநலம் கருதாத தந்நலவுணர்வுள்ள 'மேதாவிகள்', மூப்பனார், பழனியாண்டி, சுப்பிரமணியன் போலும். அரசியல் காட்டிக் கொடுப்பான்களாகிய கங்காணிகள், ம.பொ.சி. போலும் சூழ்நிலைக்கேற்ப நடக்கும் பச்சோந்திகள், எம். சி. ஆர். போலும் அரசியல் அடிமைகள், செயகாந்தனைப் போல் இரண்டகர்கள், மற்றும் திரைப்படத் தில்லுமல்லுக்காரர்கள், 'சோ'வைப் போன்ற அரசியல் கோமாளிகள், ஏமாற்றுக்காரர்கள் முதலியோரே?

தமிழ்மொழியே முன்னேறினாலும் இவர்களையெல்லாம் ஒழித்துக் கட்டாமல் இந்த இனம் முன்னேறி விடாது என்பதை அறிவியல் குழந்தைசாமிகளும், மண்டைக்கொழுப்புக் கொண்டல்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அறிவியல் படித்தவர்களிடத்தும் சாதிகள் உள்ளனவே—அது எதனால்? தமிழ்மொழியாலா? அறிவியல் படித்தவர்களிடத்தும் இந்து மத மூடநம்பிக்கைகள் உள்ளனவே—அ'து எதனால்? தமிழ் மொழிக்கு உரோமன் எழுத்து இல்லாமையாலா? அறிவியல் படித்தவர்களிடத்திலும் தந்நலம் உள்ளதே—அ'து எதனால்? தமிழ்மொழிக்கு எழுத்துகள் மிகுதியாக உள்ளதாலா?

அறிவியல் படித்த மேதாவிகள், மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்குரிய, நலன்களில் கருத்துச் செலுத்தாமையாலேய, தமிழினம் முன்னேறவில்லையே தவிர,

அறிவியல் படித்தவர்களும், பதவிக்காகவும் பட்டத்திற்காகவும் அரசியல் வல்லாண்மைக்கும் அதிகாரக் கொடுங்கோன்மைக்கும் கொடிபிடித்துக் கொண்டு, தந்நலமே பெரிதென்று கருதிக் கொண்டிருப்பதாலேயே, தமிழினம் முன்னேறவில்லையே தவிர,

அறிவியல் படித்தவர்களும் இந்துமத மடக் கொடுந்தடியர்களுக்கு அடிமைப்பட்டு ஆலவட்டம் சுற்றிப், பூணூல் திருமேனிகளின் கால்களில் விழுந்து கிடப்பதாலேயே, தமிழினம் முன்னேறவில்லையேதவிர,

தமிழ் மொழியையும் எழுத்தையும் சீர்திருத்தாமற் கிடப்பதால்தான் தமிழினம் பிற இனங்களைப் போல் முன்னேறவில்லை என்று கூறுவது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது மட்டுமன்று, காஞ்சிரங்காயைக் கவளத்துள் மறைத்து உண்ணக் கொடுப்பதும் ஆகும்.

இனி, குழந்தைசாமிகள் கூறுவதுபோல், தமிழ் மொழியையும் எழுத்தையும் சீர்திருத்தி விட்டாலேயே, தமிழினத்தில் உள்ள 60 விழுக்காட்டு ஏழை மக்களுக்கும், 80 விழுக்காட்டுக் கல்லா மக்களுக்கும், எல்லா நலன்களும் வளங்களும் விளைந்துவிடா. மொழிச் சீர்திருத்தம் என்பதும், 'எழுத்துச் சீர்திருத்தம்' (அரசு செய்துள்ளதுந்தான்) என்பதும், எல்லாம் வெறும் ஏழைமக்களை ஏமாற்றும் சீர்திருத்தந்தானே! அதுவும் பெரியார் கொள்கை என்னும் வெள்ளிப்பூச்சில் விளையாடும் சூதாட்டக் கருவிதானே! பெரியார் இ'து ஒன்றை மட்டுந்தான் செய்யச் சொன்னாரா? பொதுமக்கள் நலம் பெறுவதற்குரிய பெரியாரின் குமுகாய, அரசியல் சீர்திருத்தங்களை யெல்லாம், காலக்குப்பையில் கவிழ்த்து மூடி விட்டு, உடனடித் தேவை என்று கருதாத—கற்றவர்களுக்கு மட்டுமே யன்றி மற்றவர்களுக்கு ஓர் எள் மூக்கத்துணையாகிலும் உடனே உதவாத—மொழிச் சீர்திருத்தத்திற்கும் எழுத்துச் சீர்திருத்தத்திற்கும் அப்படி என்ன உடனடித்தேவை வந்து உலுக்குகிறது?

எனவே தமிழ் மொழியில் உள்ள குறைபாடோ, எழுத்தில் உள்ள குறைபாடோ, இப்பொழுதுள்ள தமிழினத்தின் அனைத்து முன்னேற்றக் கேடுகளுக்கும் காரணம் அன்று. அவ்வாறுனால் எழுத்து, மொழி, இலக்கணம் போலும் அனைத்து நிலையிலும் குறைபாடான இந்திமொழியை வைத்துக் கொண்டிருப்பதால், இந்திக்காரர்கள் முன்னேறுமலன்றோ கிடக்க வேண்டும்? அவன் தானே இன்றைக்கு ஆளுகிறான். இனி, பேச்சு, வழக்கற்றதும், எழுத்துடைமையற்றதும், மற்றும் பலவகைக் கோளாறுகளும் கொண்டதுமான சமசுக்கிருத மொழியை உலகத்தின் கண்களுக்கெல்லாம் தெரியும்படி உச்சிக்கு மேலே தூக்கிப் பிடித்துக்காட்டும் வாய்ப்பைப் பெற்றதால்தானே ஆரியப் பார்ப்பனர்கள் இந்திய அதிகாரத்தையே கையில் வைத்துக்கொண்டு இந்திய மக்களை ஆட்டிப் படைத்துக்கொண்டு வருகின்றனர்.

எனவே, மொழியில் உள்ள குறைபாடோ, எழுத்தில் உள்ள குறைபாடோ, தமிழினம் முன்னேறுமைக்குரிய உண்மைக் காரணம் ஆகாது. இனி, இப்பொழுதைய நிலையில்—இனத்தையே காக்க வேண்டிய—அடிமைத்தளையிலிருந்து மீட்க வேண்டிய சூழலில்—இன்றியமையாத இன முயற்சிக்கிடையில்—இந்த வகையான சிந்தனையெல்லாம் தேவையில்லாத—வேண்டாத—சிந்தனையே! அல்லது சிக்கலே!

இவற்றில் பெரிதாக மக்கள் கவனத்தையும், அறிஞர்கள் கவனத்தையும் திருப்பி, இயல்பாக உள்ள, கட்டாயம் தீர்க்கப்பட

வேண்டிய—பல வாழ்வியல், இனவியல் சிக்கல்களில் கவனம் செலுத்த இயலாமல் பண்ணிவிடக் கூடாது என்பதே நம் வேண்டு கோள் !

இனி, இத்தகைய தேவைக் கருத்துகளையெல்லாம் இங்கெடுத்துக் கூறுவதால், தமிழ்மொழியில், ஏதும் குறையே இல்லையென்றோ, அதன் எழுத்துகளில் சிலவும், மொழியமைப்பில் சிலவும் செப்பமே செய்யப்பட வேண்டுவதில்லை என்றோ, நாம் கூறுவதாக எண்ணிவிடக் கூடாது. அவ்வாறு கூறவும் மாட்டோம்.

வெறும் தமிழ்மட்டும் கற்ற தமிழ்ப்புலவர்கள் எப்படி ஒரு வகை அறிவு முடக்குற்றவர்களோ, அப்படியே, வெறும் அறிவியலறிஞர்களும் நடப்பியல் அறிவு முடக்குற்றவர்களே !

நாட்டில் உள்ள அரசியல் கொடுமைகளுக்கிடையிலும், பொருளியல் கொள்ளையடிப்புகளுக்கிடையிலும், ஆட்சிக் கொடுங்கோன்மைக்கு நடுவிலும், மக்கள் அவற்றில் மனங்கொள்ளாதவாறு, கவனத்தைத் திருப்பி, அவர்கள் ஓர் அரசியல் எழுச்சிக்கு உட்படாதவாறு, ஆள்கின்ற அதிகாரக்காரர்கள், அவர்களுக்கு எப்படி விழாக்களையும் வேடிக்கைகளையும் காட்டி, அவர்களை மூளை மழுக்கமும், சிந்தனைத்திருப்பமும் செய்கின்றார்களோ, அப்படியே, மக்களின் நடைமுறை நலன்களைப் பற்றிக் கவலைப்படாத அறிவு வல்லாண்மைக் காரர்களும், இத்தகைய மொழிச் சீர்திருத்தம் எழுத்துச் சீர்திருத்தம் போன்ற, உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டாத சீர்திருத்தங்களிலும், அறிவுச் சச்சரவுகளிலும் ஈடுபட்டுச், சந்தடிசாக்கில், அறிவியல் மணப்பொடிகளைத் தூவிக் கொண்டிருக்கின்றனர்.

இனி, குழந்தைசாமி அவர்கள் எழுதிய அறிவியல் தமிழ் என்னும் இந்நூலுக்குத் தினமணி போலும் பார்ப்பன இதழ்கள் ஏன் இவ்வளவு ஆதரவும் விளம்பரமும் தரவேண்டும் ?

அது, வேறொன்றுமில்லை ; தமிழில் எங்காவது, எவராவது துணிந்து கை வைக்கிறார்கள் என்றால், உடனே பார்ப்பனர்கள் ஆதரவு அதற்குத் தங்கு தடையின்றிக் கிடைக்கும். அது தமிழ் மேல் உள்ள அக்கறையாலன்று ; அதை எப்படியாவது சிதைவு படுத்திவிட வேண்டும் என்னும் நய வஞ்சகத்தால்தான்.

தமிழ் அறிவியல் தமிழாக மலர்ச்சியுறுதல் வேண்டும் என்றால், அப்படி இதுவரை அதற்குத் தகுதியில்லை என்றுதானே பொருள். இ'து ஏற்கனவே சமசுக்கிருதத்திலிருந்துதான் அறிவியலே கிளர்ந்தது என்னும் கருத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கு உதவும் அன்றோ ! இது பார்ப்பனர்களுக்கு ஊதியந்தானே !

மேலும், குழந்தைசாமி அவர்கள் இந்நூலில், தமிழும் சமசுகிருதமும் படிக்கப்பட வேண்டிய மொழிகள்—என்று, சமசுகிருதத்திற்கு ஆதரவான ஒரு கருத்தைத் தெரிவிக்கிறார். ஒரு மொழியைப் படிக்க வேண்டும் என்று ஓர் அறிவியல் அறிஞர் சொல்கின்

றார் என்றால், அதற்கு மற்றவர்கள் கூறுவதை விடக் கூடுதல் மதிப்பைப் பெற்ற பெருமிதம் ஒருபுறம்: தமிழ்மொழியில் பல இடிபாடுகளைச்செய்ய வேண்டும் என்று அவர் கூறிய குறைநலக் கூற்றால் தமிழ் மொழிக்கு வந்த இளைக்காரம் ஒருபுறம். இந்த இரண்டு உணர்வாலும் உச்சி குளிர்ந்து போன தினமணி, குழந்தைசாமியின் கூற்றை உச்சிமேல் வைத்துப் போற்றியதிலும் விளம்பரப் படுத்தியதிலும் வியப்பில்லை. இனி அதற்குரிய நன்றி பாராட்டுதலையும் பின்னாளில் தினமணியார் பெற்றுக்கொண்டதும் கருதத்தக்கது.

பார்ப்பனர்கள் எப்பொழுதுமே (அவர்கள் எவ்வளவு நடுநிலையாளராக இருந்தாலுமே சரி) தமிழுக்கு(கவனிக்கவும் தமிழுக்கு)ச் சார்பாகவோ, ஆதரவாகவோ, அதன் வளர்ச்சியைக் கருதுபவர்களாகவோ செயல்பட்டதில்லை. (மீண்டும் கவனிக்கவும், செயல் பட்டதில்லை ; அஃதாவது ஆதரவாகப் பேசியிருக்கலாம் ; கருதியிருக்கலாம் ; ஆனால் செயல்பட்டதில்லை.) அவ்வாறு கோடியில் ஒருவர் செயல்பட்டிருந்தாலும், அதுவும் இறுதியில் சமசுக்கிருதத்தின் ஏற்றத்தை அடியொட்டியதாகவே இருக்கும். அவர்களால் தமிழ் வளர்ச்சியடைந்தது என்று கூறிக்கொள்கின்ற அளவிலோ, சமசுக்கிருதத்தை அதற்குத் துணையாக்குகிற அளவிலோ தாம் அவர்கள் உழைத்திருப்பார்கள் என்று கருதிக் கொள்ளவும். இவற்றையெல்லாம் நல்ல பதவியில் வாய்ப்பாக அமர்ந்து விட்ட தமிழியல் அறிஞர்களோ, தமிழின்மேல் அக்கறை கொண்ட பிற துறையறிஞர்களோ கண்டு கொள்வதேயில்லை. கண்டு கொண்டாலும் தங்கள் பதவிவாய்ப்புகளுக்கு எங்கு குந்தகம் வந்துவிடுமோ என்று அஞ்சி வாய்திறப்பதே இல்லை.

இனி, பார்ப்பனர்கள், வையாபுரியார், சேது(ப்பிள்ளை), தெ. பொ. மீ—போன்ற தமிழறிஞர்களுக்குத் துணை நின்றார்கள்—ஆதரித்தார்கள் என்றால், அவர்கள் தமிழுக்குக் கொடுக்கின்ற அதே அளவு பெருமையையோ, இன்னும் கூடுதலான பெருமையையோ சமசுக்கிருதத்திற்குக் கொடுத்து, ஆரிய வேத புராண இதிகாசங்களையும் ஆரியச் சார்பான இலக்கியங்கள், கருத்துகளையும் ஆதரித்தார்கள் என்பதற்காகத்தான் இருக்க முடியுமே தவிர, தமிழுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்பதற்காக இருக்கவே முடியாது; அவ்வாறு இருந்ததாகக் காட்டவும் முடியாது.

இனி, பார்ப்பனர்களிலும் ஓரளவு தமிழுக்குச் சார்பாக இருந்த வீ. கோ. சூரியநாராயண (சாத்திரியா)ர் (தமிழ் மொழி வரலாறு—நூலாசிரியர்), பி.டி. சீனிவாச (ஐயங்கா)ர் (The History of the Tamils, the Stone Age in India, Pre-Ariyan Tamil Culture—ஆகிய நூல்களின் ஆசிரியர்), வி. ஆர். இராமச்சந்திர (தீட்சித)ர் (Origin and Spread of the Tamils, Pre-Historic South India—நூல்களின் ஆசிரியர்)—போன்ற தமிழ் மொழிக்கும் வரலாற்றுக்கும் ஆதரவும் வலிவும் தருகின்ற கருத்துகளை எழுதிய பேரறிஞர்களை அவர்கள் போற்றிக் கொள்வதில்லை. திருஞானசம்பந்தர் பார்ப்பனராக விருந்தும், தமிழ் வளர்த்த சம்பந்தன்

# இந்தியமே படை மீட்பாய்!

-மணிமுத்து

உதவியென நடித்திட்டான்;
உறவாடிக் கெடுத்திட்டான்;
உரிமைப் போரின்

கதிமாற்றிச் சாய்த்திட்டான்;
கரவாக அழுத்திட்டான்;
ஈழப் பூவை—

முதிராத பிஞ்சுகளை—
மூத்தோரைப் பெண்டிர்களை
முனைந்து சுட்டான்;

எதிராளி சிங்களவர்க்
கிளைப்பில்லை இவனென்றே
எண்ண வைத்தான்!

உடன்பாடா? ஆளுமையை
ஓச்சவெனத் திணித்திட்ட
ஓட்டைக் கூடா?

விடுவேனு தமிழினத்தை
வீழும்வரை என்றவனே
வீண்ப மிக்கே,

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்று போற்றப்படும் அளவுக்கு அவர் இருந்தார் என்பதற்காகவே பார்ப்பனர்கள் அவரை அவ்வளவாகப் போற்றுவதில்லை.

மேலும், தெரிந்தோ தெரியாமலோ வ. செ. குழந்தைசாமி போல், தமிழ்மொழியின் சிதைவுகளைக் குறித்துத் தமிழறிஞர்கள் எவர் என்ன வகையான கருத்தை எந்தக்கோணத்தில் கூறினும், தமிழ் மொழியின் நலிவுகளைக் காட்டுகிறார் என்பதற்காக, அவர்களை உடனே பார்ப்பனர்கள் தாங்கிப் பிடிப்பதும், தூக்கிப் பிடிப்பதும், ஆதரவு தருவதும், வரலாறறிந்த உண்மைகள். இந்த வகையில்தான் வ. செ. குழந்தைசாமியின் 'அறிவியல்தமிழ்'க் கட்டுரைகள் தினமணியில் வெளியிடப் பெற்றன.

இதுவரையில் நூலைப்பற்றிப் பொதுக்கண்ணோட்டத்துடனும், நூலின் தலையாய நோக்கத்தை ஒட்டிய வகையிலும், அறிவியல் பற்றிய நம்மவர்களின் குருட்டுத்தனமான முடிவுகளை விளக்குகின்ற முறையிலும், பொதுவும் சிலவகையில் சிறப்பும் வாய்ந்த கருத்துகளைக் கூறவேண்டி வந்தது.

இனி, நூலுக்குள் நுழைந்து சில, பல கருத்துகளை நெருங்கி ஆழமாகப் பார்ப்போம். (தொடரும்.)

இடம்தேடிச் சென்ருயே
இந்தியமே சரிதானே ?
எண்ணிப் பார்நீ !
தடம்மாறிச் செல்கின்ருய் ;
தமிழ்ப்புலியைச் சீண்டுகிருய்—
தரங்கெட் டாயே !

அமைதிக்குச் சென்ருயா ?
அழிவுக்குச் சென்ருயா ?
அலரும் ஈழ
இமைகொன்ருய், எதிர்நின்ருய்,
எமைவென்ருய், என்றெண்ணி
இறுமாப் போடே
அமைகின்ருய் என்ருல்நீ
அந்தோ,உன் வாழ்க்கைக்கே
அழிவு கொண்டாய் !
குமைகின்ற இனவிடிவைக்
கொன்றுவிட என்றைக்கும்
கூடா தையா !

ஆப்பசைத்த குரங்கானுய் !
ஆயிரமாம் இந்தியரை
அழிய வைத்தாய் !
காப்பதற்குச் சென்றவனே
கால்மாறி ஆடுகிருய் ;
கவனம் கொள்வாய் !
சீர்ப்படுத்திப் படைமீட்பாய்
செந்நீரை நிறுத்திடுவாய் !
சினத்தைத் தூண்டி
ஆர்ப்பரிக்கும் புலிகளினுல்
அழிவுக்குள் மாயாதே
அறிந்து கொள்வாய்—


தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்

**"தமிழ்ச்சிட்டு"**

ஆண்டுக் கட்டணம் : உருபா 9.00
தனியிதழ் : ,, 0.75

ஒரிதழுக்கு உருபா 1-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

**'தமிழ்ச்சிட்டு', சென்னை-5**

○ : *1253* : பேரன்புடைய பாவலரேறு அய்யா அவர்களுக்கு வணக்கம். இந்திய இந்தி ஆரிய இனமும், சிங்கள ஆரிய இனமும் சேர்ந்து கொண்டு மதம் வேறு பாட்டாலும் (இந்து, பௌத்தம்) ஆரிய இன வெறியால், சூழ்ச்சியாலும் ஒப்பந்தம் என்ற பெயரில் தமிழின எழுச்சியை, விடுதலையைக் கொன்றொழித்து விட்டார்கள்.

நம்மினத்துள்ளும் எவ்வளவு பல்குழுக்கள் ! உட்பகைகள் ! காட்டிக் கொடுக்கும் கயவர்கள் ! காலந்தோறும் தமிழின வீழ்ச்சிகள் ! ஆட்சி வல்லாண்மையால் ஆரிய வெற்றிகள் ! விடுதலை மறவர்களும் எதிராளியின் சூழ்ச்சிகளைச் சூழ்ச்சியால் நேர்கண்டிருந்தால் நலமாக இருந்திருக்கும் என எண்ணுகிறேன்.

எப்படியோ தமிழினம் அல்லல்பட்டு 'விடிவெள்ளி' உரிமையைக் காணும் நிலையில் அழிக்கப்பட்ட நிலை !

இனம் ஒற்றுமைப்பட்டாலும் பிளக்க வைக்கும் ஆற்றல்கள் அன்றோ மிகுதியும் வலிமை வாய்ந்ததாக இருக்கிறதே ! கரந்து படைகளால் (கொரில்லாப் போர்) தொல்லைகள் தரலாம்; வெற்றி இயலுமா ? நீளும் நினைவுகள் இனம் மொழி பற்றியே !

சிறு குறைகளிருப்பினும் தமிழுக்கும் இனத்திற்கும் தொண்டியற்றும் அமைப்புகள், தலைமைகளைப் பாராட்டியும் அணைத்தும் செல்லுதல் நலம் எனக் கருதுகிறேன். இக் கிழமை 'கல்கி' ஏட்டின் ஆசிரியவுரையைப் பார்த்தீர்களா ? விடுதலை மறவர்களுக்குக் குரல் கொடுக்கும் இயக்கங்களைத் 'தேசத்துரோகச் செயல்கள்' எனத்தங்களின் பூணூல் நச்சைக் காட்டுகின்றன. தங்கள் சிந்தனை, செயல்களுக்கு என்றும் உறுதுணையாய் உள்ளோம். அன்பு நிறை,

—புலவர் இரா. வடிவேலன், ஈரோடு.

○ : *1254* : இனவுணர்வும், மொழியுணர்வும், நாட்டுணர்வும் கொண்ட செந்தமிழ்க் காவலரும், பாவலருமாகிய ஐயா ! அவர்களுக்கு எங்கள் தாழ்மையான தமிழ் வணக்கங்கள்.

*11.11.87* அன்று உலகத் தமிழ்க் கழகம் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்திற்குத், தாங்கள் தங்கவயல் வருகை தந்து சிறப்புரையாற்றினீர்கள்.

இனவுணர்வும், மொழியுணர்வும், நாட்டுணர்வும் இல்லாத என்னைப் போன்ற இக்காலத்து இளைஞர்களுக்கு, நீங்கள் கூறிய ஒவ்வோர் உண்மையான செய்தியும், ஈழ வரலாறும், இந்திய அமைதிப்படையின் இரக்கமற்ற தாக்குதல்களும், இனவெறி பிடித்த பாசிச இராசிவ்—செயவர்த்தன ஆரியர்களின் ஒப்பந்தத்தைப் பற்றியும் நீங்கள் மிகத் தெள்ளத் தெளிவாகக் கூறினீர்கள். நீங்கள் கூறிய ஒவ்வொரு செய்தியாலும், திரைப்படம் என்னும் நஞ்சினை அருந்தி உறங்கிக் கொண்டிருக்கும் என்னைப் போன்ற இளைஞர்களை நீங்கள் "தம்பிகளே ! இனவுணர்வும், மொழியுணர்வும், நாட்டுணர்வும் கொள்ளுங்கள் !" என்று உங்கள் பேச்சாலும் எங்களைத் தட்டி எழுப்பிவிட்டீர்கள்.

இன்னும் என்னைப் போன்ற எத்தனையோ இளைஞர்கள், திரைப்படம் என்னும் மயக்கத்தாலும், 'கிரிக்கெட்டு' என்னும் மோகத்தாலும் உணர்வை இழந்து உறங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களையும் நீங்கள் தட்டி எழுப்பி உணர்வை ஊட்டினால், தமிழர்களாகிய நாம் புத்துலகம் காண்பது உண்மை. "உணர்வை ஊட்டி, உறங்கியது போதும் ; விடியலை நோக்குகின்றோம் ; விழித்தெழு ! வீரங்கொள் ! என்று, உணர்வு என்னும் பாலை ஊட்டி வரும் பாவலரேறு ஐயா அவர்களே நீங்கள் வாழ்க !—உங்கள் தமிழ்ப்பணி வளர்க ! நன்றி ! வணக்கம் !

இவண், உங்களால் விழிப்புப் பெற்ற தம்பி,

—த. சை. தமிழ்ச்செல்வன், தங்கவயல்.

O : 1255 : அன்பார்ந்த ஐயா, வணக்கம். தாங்கள் சென்னையில் நடைபெற்ற ''மக்கள் தொடர் போராட்டத்தில்'' கலந்து கொண்டது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். பாராட்டுகள்.

1. 8. 87, 6. 8. 87 ஆகிய நாள்களில் புதுச்சேரி நகரில் பெயர்ப் பலகைத் தமிழாக்கப் பணியில் தனித்தமிழ்க் கழகம் ஈடுபட்டது. பலகடைகள் தமிழாக்க இசைந்தன. இம்முறை விளைந்த குறிப்பிடத்தக்க ஒரு வெற்றி, நேரு வீதி, கடற்கரைச் சாலைகளிலுள்ள 'இந்தியன் காபி அவுசு' ''இந்தியன் குளம்பியகம்'' என மாற்றப் பட்டதாகும். அன்பு கூர்ந்து இச்செய்தியைத் தங்கள் ஏடுகளில் வெளியிடவும். த.நா. முழுவதும் இத்தகைய தமிழாக்கப்பணியினைத் தாங்கள் முன்னின்று செய்தல் நல்லது. இதுபற்றிப் பல்லாண்டுகளாய்த் தங்கட்குத் தெரிவித்து வருகிறேன். ஆவன செய்யுங்கள். அன்புடன், —க. தமிழமல்லன், புதுச்சேரி-9.

O : 1256 : பொற்றமிழ்ப் புரவல, புகழ்மிகு பாவல,
நற்றமிழ் நாவல, நடமாடும் தமிழ்க்கனல,
கற்றவ, என்னிரு கண்ணினை யொத்தவ,
உற்றஎன் தலைவ, உன்னடி வணக்கம் !

வணக்கம் 'தமிழ்நிலம்' மாத இதழை
வளர்த்தது வாழ்பவ, தமிழை வளர்ப்பவ,
மணக்கும் மாத்தமிழ் மாநாடு கண்ட
மலேசியா சென்றவ மனமகிழ் வணக்கம் !

குன்றின் விளக்கே ; கொஞ்சுந் தமிழ்,மா
மன்றின் மணியே, மாபெரும் தலைவ,
கன்றின் குரலுக் கோடி வந்தே
ஒன்றிடும் ஆப்போல், உவந்தெனை ஏற்பீர் !

ஏற்பீர் அய்யா ! என்வேண்டு கோளைப்
பார்ப்பீர், ஆரும் மாநாட்டு மலரைப்
பார்த்தே எனக்கு மடலது எழுதிச்
சேர்ப்பீர் என்னைச் செந்தமிழ் மன்றில் !

மன்ற மறவர், மனமது தன்னில்
ஒன்றிடும் கருத்தை உரைக்கும் புலவ,
என்றன் பாடல் மாநாட்டு மலரில்
ஒன்றி யிருந்ததா ? உரைப்பீர், மடலில்.

மடலொன் றெழுதுக ! மாபெரும், தலைவா !
கடலது போல அருள்மிகு காட்டி
உடலதும் இருக்கும் போதே நான்தமிழ்த்
திடலது காண இடமளிப் பீரே !

—பாவலர், சீனுவாச இராமசெயம்
இராதாபுரம், 605 501.

O : 1257 : அன்புடன், தமிழ் அய்யா, அவர்களுக்கு வணக்கம். நான் தாய் தமிழையே சரியாக எழுதத் தெரியாதவன். ஆனால் இன்று தமிழர் படும், அவலநிலையைக் கண்டும், கேட்டும், மிகவும் மனத்துயர் அடையும், பொதுவான நிலையில் உள்ள தமிழன்.

(தொடர்ச்சி உள்ளே 8-ஆம் பக்கம் பார்க்கவும்.)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)